பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 10 சனிக்கிழமை 23.04.2022 கதிர் 169

### இது ரகசியம் அல்ல!

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அதன் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் தனிநபர் பிரேரணையாக சமர்ப்பிக்கப்பட்ட – நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கான – முன்மொழிவு 2

# கோட்டா – மஹிந்தர் முரண்பாடு முற்றியது



## மாறி மாறிக் கால் வாரலுக்குக் களம் தயார்

கொழும்பு, ஏப்ரல் 23

தற்போதைய ஆட்சிப் பீடத்துக்கு எதிராக மக்களின் கிளர்ச்சி உச்சம் பெற்று வருகையில் அரசுத் தரப்பில் சகோதரர்களான தம்பியார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தமையனார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான அரசியல் கருத்து முரண்பாடு உச்சம் அடைந்திருப்பதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 11



## மைத்திரி - அமெ.தூதுவர் நேற்றுச் சந்தித்துப் பேச்சு



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங்கிற்கும் இடையில் நேற்றைய தினம் சந்திப்பு ஒன்று 11

## நம்பிக்கையில்லாப் பிரேரணை தாமதம்; தன்னால்தான் என விளக்குகிறார் ரணில்

தனது கோரிக்கைக்கு அமைவாகவே அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தாமதப்படுத்தப்படுவதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் ஏற்கனவே திட்டமிட்டபடி அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஏன் கொண்டு வரவில்லை என சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன வினவியபோதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு பதில் 11

## அவசிய மருந்துகள் வாங்க உலக வங்கி அவசர உதவி

### 760 கோடி ரூபா நிதி உதவி கிட்டுகின்றது

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றமையால் அத்தியாவசிய மருந்துப் பொருள்களை கொள்வனவு செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு உடனடி நிதியுதவியை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதற்கமைவாக 2 கோடி 17 லட்சம் அமெரிக்க டொலர் (சுமார் 760 கோடி ரூபா) 11

## பிரதமர் மஹிந்தர் - சீனப் பிரதமர் நேற்று திடீரென தொலைபேசியில் உரையாடல்


### பொருளாதாரத் தீர்வுக்கு அந்நாடு ஆதரவு தருமாம்

இலங்கையின் அரசுத் தலைமைக்குள் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் முரண்பாடு முற்றியிருப்பதாகக் கருதப்படும் சமயத்தில், நேற்று சீனாவின் பிரதமர் லீ குயாங்க், இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விரிவான பேச்சு நடத்தியிருக்கின்றார்.

இலங்கை விவகாரத்தில் இந்திய-சீனதலையீடு குறித்து பேசப்படும் 11



## மு.காவில் இருந்து நஸீர் அஹமட் 'அவுட்'! மூன்று எம்.பிக்களும் தற்காலிகமாக நீக்கம்



(நூருல் ஹுதா உமர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் நீக்கப்பட்டுள்ளார் எனக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று மாலை ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அத்துடன் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ், எம்.சி.பைஸால் காசிம், தௌபீக் ஆகியோர் கட்சி உறுப்புரிமையில் இருந்து தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று 11

## அதிபர்கள், ஆசிரியர்கள் திங்கள் வேலை நிறுத்தம்

தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வு காணுமாறு அரசை வலியுறுத்தி அரச பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை வேலை 11

## விலையை லிட்ரோ கூட்ட அதை இறக்கியது அரசு!



நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 12.5 கிலோகிராம் லிட்ரோ காஸ் சிலிண்டரின் விலை ரூ. 5,175 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ காஸ் நிறுவனம் நேற்று 11

## 40 கோடி டொலர் கடன் தவணைக் கட்டணத்தை தள்ளிவைத்தது இந்தியா

இலங்கைக்கான நாற்பது கோடி டொலர் (சுமார் 14 ஆயிரம் கோடி ரூபா) கடன் நாணயப்பரிமாற்ற கால எல்லை இந்திய மத்திய வங்கியினால் நீடிக்கப்பட்டுள்ளது எனக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு இந்தியா வழங்கும் பன்முகப்படுத்தப்பட்டதும் தாராளமானதுமான ஆதரவு தொடர்வதாகவும் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தியா, 11

## மிருசுவிலில் ரயில் விபத்தில் சிறுவன் சாவு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்ப்பாணம் மிருசுவிலில் நேற்றைய தினம் மகேந்திரா 11

## ஊடக அமைச்சர் ராஜினாமா ஜனாதிபதி ஏற்கவில்லையாம்



கடந்த சில நாள்களுக்கு முன்னர்தான் ஊடகத்துறை அமைச்சராகப் பதவியேற்ற நாலக்க கொடஹேவா தமது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டார் என நேற்றுக் காலை செய்திகள் 11

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழமையான காலதாமதமின்றி முன்னெடுக்கப்படுவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன என்று நேற்று என் பத்தியில் குறிப்பிட்டு, அதற்கான காரணங்களை இன்று தருவேன் எனத் தெரிவித்திருந்தேன்.

வழமையாக இது போன்ற தனிநபர் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டால் அது நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அறையிலேயே தவம் கிடந்து விடும். அதைத் தாண்டி சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு இது அனுப்பட்டால் அங்கு அதைப் படித்து, உரிய பரிந்துரை தந்து, அதன் பின்னர் வர்த்தமானி அறிவிப்புக்குப் போவதற்கு ஆறு மாதங்கள் கடந்து விடும்.

ஆனால், பிரதான எதிர்க்கட்சி பரபரப்பாக சமர்ப்பிக்கும் பிரேரணை என்பதனால் நாடாளுமன்ற அலுவலக அறைக்குள் அது படுத்துக் கிடக்காது. விரைந்து சட்டமா அதிபர் திணைக்களத்துக்குச் செல்லும். அங்குதான் அது தூங்கும் என்று பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனால், அதை மாற்றி விட்டார் சுமந்திரன்.நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் குழுக்களின் அறையில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டினார் சபாநாயகர். அந்தச் சமயத்தில் இந்தக் கூட்டத்துக்கான ஆலோசனையை வழங்குவதற்காக சட்டமா அதிபர் தாமே நேரடியாக அங்கு பிரசன்னமாகியிருந்தார்.

அப்போது அன்று காலையில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் அதன் செயலாளர் தனிநபர் பிரேரணையாக சமர்ப்பித்த – நிறைவேற்றதிகார ஜனாதிபதிமுறையை ஒழிப்பதற்கு வழி செய்யும் – பிரேரணை குறித்து பேச்சுத் திரும்பியது.

அச்சமயம் சுமந்திரன் எம்.பி. குறுக்கிட்டு சட்டமா அதிபரிடம் ஒரு கேள்வியை எழுப்பினார்.

“இந்தப் பிரேரணைக்கு அது வெறுமனே நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினால் போதுமா? அல்லது சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறவேண்டுமா என்ற உங்களின் (சட்டமா அதிபரின்) பரிந்துரை முதலில் வேண்டும். இந்தப் பிரேரணை தொடர்பில் அந்த ஒரு விடயத்தைத்தான் நீங்கள் பரிசீலித்து முடிவு செய்ய வேண்டியிருக்கும். அதற்கு உங்களுக்கு எவ்வளவு காலம் தேவை?” – என்று கேட்டார் சுமந்திரன்.

“அது சிறிய விடயம். நான் ஓரிரு நாளில்பரிந்துரையைத்தந்து விடுவேன். காலதாமதமாகாது” – என்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் முன்னிலையிலும் உறுதி கூறினார் சட்டமா அதிபர்.

ஆக, சட்டமா அதிபரின் பரிந்துரையுடன் இம்மாத முடிவிலோ, அடுத்த மாத முற்பகுதியிலோ சபைக்கு இந்தப் பிரேரணை வரக் கூடிய வாய்ப்பு இதனால் பிரகாசமாகியிருக்கின்றது.

கால தாமதம் தவிர்க்கப்பட்டால் விடயம் மளமளவென்று முன்னேற வாய்ப்புண்டு.

★ ★ ★

அவர் ஒரு சிரேஷ்ட தமிழ் ஊடக நண்பர். என்னப்போலவே – இல்லை, இல்லை, அதிலும் விட பன்மடங்கு அதிகம் – பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பழகுவார். அதேபோல ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனும் ஊடாடும் ஓரிரு தமிழ் ஊடகவியலாளர்களில் ஒருவர்.

அவரின் முகப் புத்தகத்தில் நேற்று மாலை ஒரு சினிமாப் பாட்டு பதிவாகியிருந்தது. தெரிந்தவர்கள் யாராவது அந்தப் பாட்டின் கருத்தை சிங்களத்தில் ஜனாதிபதிக்கு மொழி பெயர்த்துக் கொடுத்தால் நல்லது.

“ராஜபார்ட் ரங்கதுரை’ படத்தில் வரும் பாடல் அது. கண்ணதாசனின் வரிகளில் அமைந்தது. என் நண்பர் பகிர்ந்த வரிகள் வருமாறு:–

“அம்மம்மா தம்பி என்று நம்பி
அவன் உன்னை வளர்த்தான்
தாய் என்றும் தந்தை என்றும்
தன்னை நினைத்தான்
அது உனக்காக வாழ்ந்த
உள்ளம் அல்லவோ
அம்மம்மா தம்பி என்று நம்பி....”

கோட்டாபய – மஹிந்தர் இருவருடனுமே ஊடாடும் ஓர் ஊடக நண்பர், இருவருக்கும் நடுவில் கனகச்சிதமாக வைக்கக் கூடிய மிகப் பொருந்தமான வாசகம் இவை.

2019 ஜனாதிபதித் தேர்தலுக்குரிய வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷவை மஹிந்த ராஜபக்ஷ அறிவிப்பதற்கு சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர் நிகழ்ந்த ஒரு சம்பவம் எனக்கு இப்போது நினைவுக்கு வருகின்றது.

தங்காலையில், மஹிந்த ராஜபக்ஷவின் பூர்வீக இல்லமான கார்ட்டன் ஹவுஸில் அவருடன் மதிய போசன விருந்துண்ணும்வாய்ப்புபத்திரிகையாளனான எனக்குக் கிட்டியது. விருந்து மேசையில் அவரது மூத்த மகன் நாமல் ராஜபக்ஷவும் இருந்தார் என்று நினைவு. நாங்கள் மூன்று பேரும்தான்.

சாப்பிட்டு முடித்து பப்பாப்பழம் கடித்துக்கொண்டிருந்தார் மஹிந்தர்.

“முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கு வேட்பாளர் நியமனம் வழங்குவீர்களா?” – என்று சடாரென அவர் எதிர்பார்க்காத வேளையில் நான் கேட்டேன்.

பப்பாசிப் பழத் துண்டு ஒன்றை முள்ளுக் கரண்டியால் குத்தி தனது வாய்க்குக் கிட்ட கொண்டு போனவர், என் கேள்வியைக் கேட்டதும் அதை நிறுத்தினார். தீர்க்கமான என்னைப் பார்த்தார். அவர் முகத்தில் ஒரு சலனம் தெரிந்தது.

“அவருக்கு (கோட்டாவுக்கு) தெற்கில் இருக்கும் ஆதரவு உங்களுக்குத் தெரியுமா? இரண்டு உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அவருக்கு எதிரான வழக்குகளை நாங்கள் விசாரிக்க மாட்டோம் என்று கூறி தங்களை அந்த வழக்குகளில் இருந்து விடுவித்துக் கொண்டு விட்டனர். அந்தளவு தூரம் அவருக்கு ஆதரவு – செல்வாக்கு – உண்டு.” – என்று மட்டும் கூறி நிறுத்தினார் மஹிந்தர். அப்போது அவர் ஓர் எம்.பி. மட்டுமே.

என் கேள்விக்கு அவர் நேரடியாகப் பதில் தரவில்லையே என்ற ஆதங்கம் எனக்கு.

வாய்க்குக் கிட்டே கொண்டு போன பப்பாசிப் பழத் துண்டைக் கடித்து, மென்று விழுங்கி விட்டு, என்னைப் பார்த்தபடி மேசையில் இருந்த நப்கினை எடுத்துக் கையைத் துடைத்தபடி “அந்த அதிகாரப் பதவிக்கு யாரும் வந்தால் எப்படி நடந்து கொள்வார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்தானே...!” – என்று இழுத்தார் அவர்.

எனக்கு அவரது பதிலும் நிலையும் தெளிவாகப் புரிந்தன.

சந்திப்பு முடிந்து யாழ்.திரும்பியதும் நெருக்கமானவர்களிடம் என் அனுமானத் தைக் கூறினேன்.

தான் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் கோட்டாபயவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க வேண்டிய கட்டாயத்தில் – இக்கட்டில் – தாம் இருக்கின்றார் என்பதுதான் மஹிந்தரின் நிலைமை. வேட்பாளர் நியமனம் தனது கட்டுக்குள் அடங்கிய விடயம் அல்ல. தேர்தலிலும் வென்று அதிகாரத்துக்கு வந்ததும் தன்னையும் தூக்கி எறிவார் தமது தம்பி என்பது அண்ணனுக்கும் நன்கு தெரியும். தெரிந்து கொண்டே – எதிர்பார்த்தே – வேறு மார்க்கமின்றி – அவரை வேட்பாளராகத் தேர்வு செய்து வாங்கிக் கட்டப் போகின்றார் மஹிந்தர் என நான் முழுமையாக அனுமானித்தேன். எனக்கு நெருங்கியவர்கள்பலருக்கும்அப்போதே இதைக் கூறிவந்தேன்.

ஆக, தமக்கு இப்படியாகும் என்று தெரிந்து கொண்டே, தம்பியினால் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார் மஹிந்தர்.

ஆனாலும் இந்த நெருக்கடிக்கு மத்தியிலும் அவர் உறுதி தளராதவராக இருக்கின்றார் என்கின்றன விடயமறிந்த நெருங்கிய வட்டாரங்கள்.

ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்களை வழங்கிய 20ஆவது திருத்தத்தை மீளப் பெற்று, 19ஆவது திருத்த ஏற்பாடுகளை மீள் கொண்டு வரும் தமது நடவடிக்கையில் அவர் தீர்க்கமாக உள்ளார். அது தொடர்பில் நாளை பிறக்கும் புதிய வாரத்தில் கட்சிகளின் தலைவர்களைத் தனித் தனியே அழைத்து அவர் பேசவிருக்கின்றார். இந்த வரிசையில் கூட்டமைப்பினரையும் அவர் சந்திக்க இருக்கின்றார்.

அதிகாரப் பக்கத்தில் கேட்டாபாயவின் கைகள் ஓங்கியிருந்தாலும் அரசியல் உறுதியில் மஹிந்தர் தெளிவாகவும் முன்னணியிலும் உள்ளார்.

இருவரும் பகிரங்கத் தளத்தில் முரண்பாட்டுக்கு இன்னும் வரவில்லை.

வந்ததும் களம் இன்னும் சூடாகும். பார்ப்போம். நடக்கப்போகின்றவற்றை...!

– மின்னல் –










கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## தலைவிதியும் துரதிஷ்டமும்

நாடாளுமன்றத்தின் இந்த மாதக் கூட்டத் தொடர் முடிந்து விட்டது. இனி அடுத்த அமர்வு இரண்டு வாரம் கழித்து,மே 4ஆம் திகதிதான்.

இப்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு இடைக்கால தீர்வு எதையும் தராமலேயே – அதற்கான ஆக்கபூர்வமான சமிக்ஞை எதையும் காட்டாமலேயே – இந்த மாதக் கூட்டத் தொடர் முடிந்து விட்டது.

அடுத்த மாத முற்பகுதியில், புதிய பிரதிச் சபாநாயகர் தெரிவு என்ற துவந்த யுத்தத்துக்கான ஆயத்தத்துடன் சபை மீண்டும் கூடும். எனினும், அதிலும் கூட இப்போதைய நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் பயனுள்ள நகர்வு ஏதும் இடம்பெறுமா என்பதற்கு உறுதியான பதில் ஏதுமில்லை.

'அழுவார் எல்லாம் அழுவார். துருவன் பெண்டாட்டிக்கு அழுவார் எவருமில்லை' – என்றொரு பேச்சு மொழி நம்மத்தியில் உண்டு.

அது போல, அரசியல் பிரச்சினைகள் குறித்து – அதிகாரப் போட்டி குறித்து – ஒரு தரப்பை ஆட்சியிலிருந்து துரத்துவது குறித்து – எல்லாம் நாடாளுமன்றத்திலும் பிற தளங்களிலும் அதிகம் பேசியாயிற்று.

ஆனால் மக்களின் எரியும் பிரச்சினை குறித்து – எகிறிச் செல்லும் விலைவாசி குறித்து – உருப்படியாக எதுவும் பேசப்படவுமில்லை; அது விடயத்தில் விரைந்து இடைக்காலத் தீர்வு ஏதும் தருவதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவுமில்லை.

அந்த விலைவாசி உயர்வினால் மக்கள் படும் கஷ்டத்தைக் காட்டி அரசியல் பேசப்படுகின்றது. ஆட்சி மாற்றம், அதிகாரப் பறிப்பு பற்றி விவாதிக்கப்படுகின்றது. ஆனால் அதற்கு முகம் கொடுக்க இயலாமல் பரிதவிக்கும் பாரமனுக்கு இடைக்கால அல்லது மாற்று வசதி குறித்து சிந்திக்கப்படுவதாகத் தெரியவில்லை. தாங்க முடியாத விலைவாசி உயர்வை எதிர்கொள்ள முடியாமல் துவண்டு கிடப்பது உன் தலையெழுத்து, அதை வைத்து நாங்கள் அரசியல் செய்து, முடிவு காண்பது மட்டுமே எங்கள் வேலை என்று அதிகாரத்தில் இருப்போரும், அந்த அதிகாரத்தில் கண் வைத்துப் போட்டியிடுவோரும் தமக்குள் மோதிக் கொண்டிருக்கின்றார்கள்.

பண வீக்கம் இருபது வீதத்தைத் தாண்டி விட்டது. எரிவாயு ஒரே பாய்ச்சலில் இரட்டை மடங்காகும் ஏதுநிலை. பாண் 150 ரூபா. எரிபொருளின் விலையோ நினைத்துப் பார்க்க முடியாத உயர்வு. பஸ், ஓட்டோ கட்டணத்திலிருந்து எல்லாமுமே அதிகரிப்பு. வெளிநாட்டு உதவியில் வாழும் குடும்பங்களைத் தவிர, இங்கு அனைத்துத் தரப்பினருமே அன்றாட வாழ்வுக்கு துந்தணாப் போடும் நிலைமை.

விளிம்பு நிலை, நடுத்தர வர்க்கக் குடும்பங்கள் எல்லாம் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வந்து விட்டன.

பேச்சு வழக்கில் கூறப்பட்டு வந்த பசியும், பட்டினியும் நிஜமாகிப் போய்விட்ட பேரவலம்.

இன்றிருக்கும் இந்த இக்கட்டு நிலை நாளை மோசமாகும், அடுத்த நாள் அதைவிடக் கடுமையாகும் என்ற – எதிர்காலமே மோசமாகி இருள் சூழ்ந்ததாகத் தென்படும் – பேரவல அச்ச நிலைமை.

குடும்பத்தை அடுத்த வேளை எப்படிக் காப்பாற்றுவது என்று தெரியாமல் பரிதவிக்கும் மோசமான கட்டத்தில் ஒவ்வொரு குடும்பத் தலைவனும் தலைவியும் சிக்கியுள்ளனர்.

இலங்கையின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத பேரவலம் இது. இந்தப் பேரிடரை எதிர்கொள்வதற்கான தற்காலிக ஏற்பாடுகளைச் செய்வதற்காகவேனும் அரசியல் மற்றும் அதிகாரத் தலைமைகள் ஒன்றுபடாத நிலைமை காணப்படுவது நாட்டின் பெரும் துரதிர்ஷ்டம்.

இந்த மோச நிலையில் தாங்கள் தாங்கள் அரசியல் செய்து, அதிகாரத்தைக் கைப்பற்றுவது குறித்து அல்லது கைப்பற்றிய அதிகாரத்தைக் தக்க வைப்பது குறித்து மட்டுமே அவை சிரத்தையாக இருப்பது நமது நாட்டின் தலைவிதி.

# போராட்டத்தை இளைஞர்கள் எதற்காகவும் நிறுத்தக்கூடாது

### சரத் பொன்சேகா கோரிக்கை



அரசமைப்புத் திருத்தங்கள் நாட்டின் அரசியல் நெருக்கடியைத் தீர்க்காது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர் –

அரசமைப்புத் திருத்தம் இலங்கைக்கு எவ்வாறு உதவும் என்று எனக்குத் தெரியவில்லை. அரசியல் கலாசாரத்தில் மாற்றம் தேவை. அரசமைப்புத் திருத்தமோ, இடைக்கால அரசாங்கத்தை நியமிப்பதோ அந்தத் தருணத்தில் இலங்கைக்கு உதவப் போவதில்லை.

நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தாலும் பயனில்லை என்றார். வீதியில் இறங்கி போராட்டம் நடத்துபவர்கள் அரசியல் கலாசாரத்தில் மாற்றத்தை விரும்புகின்றனர். போராட்டங்களை நடத்தும் இளைஞர்களுக்கு எங்கள் ஆசீர்வாதமும் ஆதரவும் உண்டு.

எனவே வீதியில் நிற்கும் இந்த இளைஞர்களிடம் போராட்டத்தைக் கைவிட வேண்டாம் என நான் கூற விரும்புகின்றேன். அவர்களின் வெற்றி கையில் உள்ளது. பொதுமக்களும் அவர்களுக்கு ஆதரவளித்து அவர்களுக்கு தேவையானவற்றை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். – என்றார்.

# நாட்டுக்குவரும் வெளிநாட்டவர்களுக்கு மேலும் பல தளர்வுகள் அறிவிக்கப்பட்டன

தடுப்பூசி போடப்படாத மற்றும் பகுதியளவு தடுப்பூசி போடப்பட்ட பயணிகளுக்கு வரும்போது பி.சி.ஆர். பரிசோதனையின் தேவையை நீக்கி, நாட்டிற்குள் நுழைவதற்கான தேவைகளை இலங்கை மேலும் தளர்த்தியுள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் கூறியுள்ளது.

தடுப்பூசி போடப்படாத மற்றும் பகுதியளவு தடுப்பூசி போடப்பட்ட பயணிகள் அனைவருக்கும் முதல் நாள் பி.சி.ஆர். சோதனை மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், வருகையின் போது பி.சி.ஆர். சோதனையிலிருந்து விலக்கு பெற, பயணிகள் புறப்பட்ட 72 மணி நேரத்திற்குள் எதிர்மறையான பி.சி.ஆர். அறிக்கையுடன் வரவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

றபிட் அன்டிஜன் சோதனைகளைத் தேர்வு செய்யும் பயணிகள் புறப்படுவதற்கு 48 மணிநேரத்திற்கு முன்பு அதைச் செய்திருக்க வேண்டும் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தெற்காசியாவிலேயே அதிக விலைக்கு இலங்கையில் எரிபொருள் விற்பனை

### புள்ளிவிவரத் தரவுகள் சுட்டிக்காட்டு

சர்வதேச தரவுகள் மற்றும் புள்ளிவிவரங்களின்படி, தெற்காசிய நாடுகளிலேயே அதிக விலையில் இலங்கையில் எரிபொருள் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் ஒரு லீற்றர் பெற்றோல் விலை 113.19 இந்திய ரூபாவாகவும், நேபாளத்தில் 158.76 ரூபாவாகவும், பாகிஸ்தானில் 152.06 ரூபாவாகவும், வங்கதேசத்தில் 87.49 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

இலங்கையில், தற்போது ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 338 ரூபாவாகவும், டீசல் லீற்றர் ஒன்றின் விலை 289 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு தற்போது 339.99 ஆகப் பதிவாகியுள்ளது.

சர்வதேச தரவுகள் மற்றும் புள்ளிவிவரங்களின்படி, உலகில் டொலருக்கு நிகரான நாணயமாக இலங்கை ரூபாவே மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. நாணய மதிப்பிழப்பின் அடிப்படையில் இலங்கை சூடானுக்கு சற்று கீழே உள்ளது. சூடான் பவுண்டின் மதிப்பு அமெரிக்க டொலருக்கு எதிராக 447.50 ஆகப் பதிவாகியுள்ளது.

# கடன் தொடர்பில் ஆலோசனைக்குழு நியமிக்க மூன்று வாரங்கள் தேவை!


### அலி சப்ரி தெரிவிப்பு

நாட்டின் கடன் தொடர்பில் ஆலோசனைகளை வழங்கும் குழுவை நியமிக்க மூன்று வாரங்கள் கால அவகாசம் தேவை என நிதி அமைச்சர் அலி சப்றி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிதி நிலைமை மற்றும் கடன் தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்கான குழுக்களை நியமிப்பதற்கு குறைந்தபட்சம் 10- 15 நாள்கள் அவகாசம் தேவைப்படுகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி என்பனவற்றிடமிருந்து எதிர்வரும்



ஆறு மாத காலத்திற்குள் 50 கோடி அமெரிக்க டொலர் கடன் கிடைக்கப் பெறும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் பொதுமக்களின் எழுச்சிக்கு எதிரான ஆயுததீரியான அடக்குமுறைக்குக் கண்டனம்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் விடுத்தது

எமது நாட்டின் ஆட்சியாளர்களின் நிர்வாக திறமையின்மை மற்றும் ஊழல் ஆட்சி முறைமை காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு எதிராகவும் நாடு தழுவிய முழுமையான அரசியல் மாற்றத்தைக்கோரி இன, மத பேதமின்றி ஜனநாயக வழியில் மக்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்களுக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் முழுமையான ஆதரவை நல்குகின்றோம்.

– இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

இந்தப் போராட்டங்களின் தொடர்ச்சியாக ரம்புக்கனையில் 19.04.2022 அன்று நடைபெற்ற மக்களின் அமைதியான ஆர்ப்பாட்டத்தில் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்து பலர் காயமடைந்த சம்பவத்துக்கு எமது கண்டனங்களைத் தெரிவிப்பதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை ஆயுத ரீதியாக அடக்க முற்படும் போது அது மேலும் வீரியம் அடைந்து விரிவடையும் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்களை சட்டத்தின்முன் நிறுத்துவதுடன் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும்.

எனினும் எமது நாட்டில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடைபெறும் என்பது கேள்விக்குறியே. எமது பகுதியில் இந்த வகையான சம்பவங்கள் முன்னைய காலங்களில் நடைபெற்ற போது எமது மக்களுக்காக ஒருவரும் குரல் கொடுக்கவோ அல்லது இது போன்ற பல் வேறு நிறுவனங்கள் அமைப்புகள் கண்டனங்களைத் தெரிவிக்கவோயில்லை என்பது ஒரு துர்பாக்கியமான வரலாறு ஆகும்.

எனினும் நாம் இந்தச் சம்பவத்துக்கு உரிய நேரத்தில் குரல் கொடுப்பதுடன் தற்பொழுது அரசாங்கத்துக்கு எதிராகப்பொதுமக்களாலும்பொது அமைப்புக்களாலும் மேற்கொள்ளப்படும் போராட்டத்துக்கு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். – என்றுள்ளது.

# சாகும்வரைக்கும் உணவு ஒறுப்பில் ஈடுபட்ட தேரர் வைத்தியசாலையில்!

## காலிமுகத்திடல் போராட்டக் களத்தில்



உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தெரிப்பேஹே சிறிதம்ம தேரர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் தொடர்ச்சியாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் மேற்படி போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தேரர் கடந்த 20 ஆம் திகதி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே அவர் நேற்று (வெள்ளிக்கிழமை) திடீரென வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

# காலிமுகத்திடல் போராட்டக் காரர்களை ஒருபோதும் தனித்துவிடப் போவதில்லை

## லண்டனில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு

கொழும்பு, ஏப். 23

கொழும்பு காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களுக்கு ஆதரவாக நாளை (ஞாயிறுக்கிழமை) லண்டனில் உள்ள பிரித்தானிய நாடாளுமன்றத்துக்கு எதிரில் பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

காலிமுகத் திடல் போராட்டக் காரர்களைத் தனித்துவிடப் போவதில்லை என்ற தொனிப் பொருளில் இந்த ஆர்ப் பாட்டம் நடத்தப்படவுள்ளது.

பிரித்தானியாவில் வாழும் இலங்கையர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்துள்ளனர். ஞாயிறுக்கிழமை நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தை பதவி விலகுமாறு கோரி கொழும்பு காலிமுகத் திடலில் நடத்தப்படும் போராட்டம் இன்று 16 ஆவது நாளாகத் தொடர்ந்தும் நடைபெறுகிறது.

கடந்த 9 ஆம் திகதி ஆரம்பித்த இந்தப் போராட்டத்தின் 14 ஆவது நாளான வியாழன் இரவு பெருந்திரளான மக்கள் போராட்டக் களத்தில் ஒன்று கூடினர். ஜனாதிபதியும் அரசாங்கமும் உடனடியாகப் பதவி விலகிச் செல்ல வேண்டும் என போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# இலங்கையின் பணவீக்கம் 20 வீதத்தைத் தாண்டியது

இலங்கையில் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பணவீக்கம் 21.5 சதவீதமாக அதிகரித்துள்ளதாக புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நுகர்வோர் விலை சுட்டெண் தொடர்பான அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச பணவீக்க சுட்டெண்ணுக்கு அமைய இலங்கையின் பணவீக்கம் 20 சதவீதத்தை தாண்டி இருப்பது இதுவே முதல் முறை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் இலங்கையின் பணவீக்கம் 18.7 சதவீதமாகக் காணப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்துள்ளமை ஆகியன காரணமாக பணவீக்கம் அதிகரித்துள்ளதுடன் அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகளும் அதிகரித்துள்ளன.

# மனைவி பாதுகாப்பாக குழந்தைபெறவே அகதியாக தமிழகத்துக்கு வந்தேன்

## இளம் குடும்பஸ்தர்







இலங்கையில் இருந்து மேலும் 4 குடும்பத்தைச் சேர்ந்த 17 நபர்களும் தனி நபர் ஒருவர் உள்ளடங்கலாக 18 பேர் அகதிகளாகத் தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்த 3 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேரும்,யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு குடும்பம் 4 நபர்கள், தனி நபர் ஒருவரும் உள்ளடங்குகின்றனர்.

மன்னார் மாவட்டம் பேசாலை கடற்கரையில் இருந்து கடந்த வியாழக்கிழமை இரண்டு படகுகளில் மன்னார் அடம்பன் மற்றும் உயிலங்குளம் பகுதிகளைச் சேர்ந்த பிரதீப், கஸ்தூரி, சுமித்ரா, நகுன், பியோனா, நகுலேஸ்வரன் என நான்கு மாத கர்ப்பிணிப் பெண் ஒன்றரை வயது சிறுவன் உட்பட மூன்று குடும்பத்தை சேர்ந்த 13 இலங்கைத் தமிழர்கள் வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையில் இறங்கியுள்ளனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற ராமேஸ்வரம் மரைன் பொலிஸார் இலங்கைத் தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் நீர்வேலி பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 நபர்களும்,அப் பகுதியைச் சேர்ந்த தனி நபர் ஒருவர் உள்ளடங்கலாக 5 பேர் நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை தனுஷ்கோடியைச் சென்றடைந்தனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகத் தற்போது அத்தியாவசியப் பொருள்களான அரிசி, பருப்பு, கோதுமை, விலை கடுமையாக உயர்ந்துள்ளமையுடன் மருத்துவப் பொருள்களுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனவே தனது நான்கு மாத கர்ப்பிணி மனைவிக்கு பாதுகாப்பாகக் குழந்தை பிறப்பதற்காக தமிழகத்துக்கு அகதிகளாக வந்தோம் எனப் பாதுகாப்பு அதிகாரிகள் நடத்திய விசாரணையில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தெரி வித்துள்ளார்.

தற்போது பால் மா மற்றும் கோதுமையின் விலை கடுமையாக உயர்ந்துள்ளமையால் தனது ஒன்றரை வயது குழந்தையை வைத்து இலங்கையில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் வரும் நாள்களில் உணவு பஞ்சம் ஏற்படும் அபாயம் உள்ளமையால் குழந்தைகளின் எதிர் காலத்தைக் கருத்தில் கொண்டு தான் தமிழகத்துக்கு குடும்பத்துடன் அகதியாக வந்தோம் எனத் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணைக்குப் பின் இந்த 18 இலங்கைத் தமிழர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளனர்.

மேலும் இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் இன்று வரை 60 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# புலிகளின் தலைவரின் தீர்க்கதரிசன வார்த்தை இன்று தெளிவாக நடைமுறையில் இருக்கின்றது!

## சிறிதரன் எம்.பி. மன்றில் எடுத்துரைப்பு

2009இல் இதே மாதத்தில் பாற்சோறு கொடுத்து சிங்கள மக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர், இன்று அவர்கள் அதனை புரிந்து கொள்ளும் காலம் வந்துள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் தீர்க்கதரிசனமான வார்த்தைகள் இலங்கையில் தெளிவாக நடைமுறையில் இன்று இருக்கின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரித்தவை வருமாறு –

இலங்கையில் இரத்தக் கறைகளால் எழுதிய வரலாறுகளில் ஏப்ரல் 21 தாக்குதலும் உள்ளடங்குகின்றது. சஹ்ரான் என்ற தனிநபரை மையமாகக் கொண்டு இந்த விடயம் கூறப்படுகின்றது.

ஆனால் இதற்கு பின்னால் பெரிய அரசியல் பின்புலங்களும், அரசியல் நடவடிக்கைகளும் உள்ளன எனக் கூறப்படுகின்றது. பல இடங்களில் மக்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் 90 வீதமானவர்கள் தமிழர்களே.

யுத்தத்திலும் தமிழர்களே கொல்லப்பட்டனர். குறித்த தாக்குதலை நடத்தியது யார்? அதன் சூத்திரதாரிகள் யார்? இதன் பின்னணி என்ன? என்பதை இராணுவ மற்றும் பொலிஸ் பலம் இருந்தும் வருடங்கள் கடந்தும் இன்னும் நிரூபிக்க முடியவில்லை.

இது தொடர்பில் நீதியான அறிக்கையை நாங்கள் இன்னும் வெளியில் காணவில்லை.

இதேவேளை, கேகாலை – ரம்புக்கனையில் சிங்கள இளைஞன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். அவருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். பல போராட்டங்களை மக்கள் முன்னெடுக்கின்றனர். இந்த நாட்டில் ராஜபக்ஷ குடும்பத்தை வெளியேறுங்கள் என்று மக்கள் பேராடுகின்றனர். அந்த நிலையிலேயே ரம்புக்கனையில் நடந்த போராட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

அதில் கொல்லப்பட்டவருக்கு நாங்கள் எங்களின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். நாடு இப்போது கொதிநிலையில் உள்ளது. நீதியான தலைமைத்துவத்தில் இந்த நாடு இல்லை.

நாட்டில் நடந்த படுகொலைகளுக்கு எந்தவொரு தலைவரும் வருத்தம் தெரிவித்தனர் என வரலாறுகள் இல்லை. யுத்தத்துக்குப் பின்னர் ராஜபக்ஷவினருக்கு எதிராக பொது வேட்பாளராக களமிறங்கிய சரத் பொன் சேகாவுக்கு தமிழர்கள் வாக்களித்தனர்.

அதேபோன்று 2015 இல் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தனர். 2019 இலும் தமிழர்கள் கோட்டாபயவிற்கு எதிராகவே வாக்களித்தனர். ராஜபக்ஷ குடும்பத்தினர் இந்த மண்ணில் ஆட்சி செய்ய வல்லமையற்றவர்கள் என்பதனாலேயே எதிர்த்து வாக்களித்தனர்.

அதனால் வீதிகளில் போராடும் சிங்கள சகோதர, சகோதரிகளிடம் விடுக்கும் வேண்டுகோள் என்னவென்றால், நாங்கள் இவற்றை முன்னரே செய்தவர்கள். நாங்கள் போராடும் போது நீங்கள் மௌனம் காக்க வைக்கப்பட்டீர்கள்.

2009இல் இதே மாதத்தில் பாற்சோறு கொடுத்து சிங்கள மக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். இன்று அவர்கள் அதனைப் புரிந்துகொள்ளும் காலம் வந்துள்ளது. நாங்கள் இந்த மண்ணின் பூர்வீகக் குடிகள். நாங்கள் வந்தேறு குடிகள் அல்லர்.

விஜயன் வருவதற்கு முன்னரே இங்கு வாழ்ந்துள்ளோம். வடக்குக் கிழக்கு எங்களின் தாயக மண் என்று எப்போது நீங்கள் புரிந்துகொள்வீர்கள். உங்களுடன் சேர்ந்து போராட விரும்புகின்றோம். ராஜபக்ஷவினர் வெளியேறிய பின்னர் தமிழருடைய தேசம் தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன? நாங்களும் நீங்களும் நாட்டின் தேசியப் பிரஜைகள் என்பது எப்போது உருவாகும்.

இதே காலிமுகத்திடலில் தந்தை செல்வாவின் தலைமையில் அறவழிப் போராட்டத்தைத் தமிழ்த் தலைவர்கள் முன்னெடுத்த போது சிங்கள காடையர்களால் தாக்கப்பட்ட வரலாற்றை சிந்தித்துப் பாருங்கள்.

பல இடங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறியிருந்தார். நான் சிங்கள மக்களுக்கு எதிரானவனும் அல்லன். அவர்களை எதிரியாக பார்ப்பவனும் அல்லன்.

அவர்களின் வரலாறு, பண்பாடு, கலாசாரத்தை மதிக்கின்றவன். ஆனால் எங்கள் மீது நீட்டப்படும் துப்பாக்கிகள், செய்யும் கொலைகள் என்றோ ஒருநாள் சிங்கள மக்கள் மீதும் திரும்பும்.

அப்போது சிங்கள மக்கள் புரிந்து கொள்வார்கள். அன்றைய பிரபாகரனின் தீர்க்கதரிசனமான வார்த்தைகள் இலங்கையில் தெளிவாக நடைமுறையில் இன்று இருக்கின்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் 7 ஆவது மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது






புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் 7 ஆவது அனைத்திலங்கை மாநாடு கடந்த 15,16,17 ஆம் திகதிகளில் மாத்தளையின் உக்குவளை நகரில் இடம்பெற்றது. நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் வருகைதந்த கட்சிப் பிரதிநிதிகளின் இந்த மாநாடு, ஐந்து பேர் கொண்ட தலைமைக் குழுவின் தலைமையில் நடைபெற்றது.

கட்சியின் கொடியை மூத்த தோழர்கள் ஏற்றி வைத்து சர்வதேச கீதம் இசைத்தலுடன் மாநாடு ஆரம்பமாகியது. தேசிய அமைப்பாளர் தோழர் வெ.மகேந்திரன் மாநாட்டு நிகழ்ச்சி நிரலை முன்வைத்தார்.

தொடக்க உரையை சிவ.இராஜேந்திரன் நிகழ்த்தினார். மாநாட்டுக்கான உள்நாட்டு அரசியல் அறிக்கை, சர்வதேச அறிக்கை என்பனவற்றை பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் முன் வைத்தார்.

மேற்படி அரசியல் அறிக்கை, இலங்கையின் சமூகக் கட்டமைப்பில் இருந்துவரும் அரசியல், பொருளாதார, சமூக அடிப்படைகளையும் அவற்றின் விளைவுகளையும் வரலாற்று வழியாகவும் கோட்பாட்டு நிலை நின்றும் அணுகி ஆராய்ந்தது.

மேலும் நாடும் மக்களும் இன்று எதிர் நோக்கி நிற்கும் மோசமான அரசியல், பொருளாதார நெருக்கடிகள் பற்றியும் அதனால் மக்கள் வெளிப்படுத்தி வரும் பிரதிபலிப்புகளையும் மாநாடு கவனத்தில் எடுத்து விவாதித்துக்கொண்டது.

குறிப்பாக கடந்த இரண்டு வாரங்களுக்கு மேல் கொழும்பிலும் சுற்றுப்புற இடங்களிலும் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் இடம்பெற்று வரும் மக்களின் தன்னெழுச்சி எதிர்ப்புப் போராட்டங்கள் பற்றியும் கவனத்தில் கொண்டு விவாதிக்கப்பட்டது.

இன்றைய ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்கு எதிராக இடம்பெற்று வரும் மக்களது தன்னெழுச்சிப் போராட்டங்களைக் கட்சி ஆதரிக்கின்றது. அந்த வகையில் எமது தோழர்கள் பங்குகொண்டும் வருகிறார் கள். அதேநேரம் நாட்டின் மீட்சிக்கும் மக்களது நல்வாழ் விற்கும் முன் வைக்கப்படவேண்டிய பொது வேலைத்திட்டம் பற்றி கட்சி மாநாடு வலியுறுத்திக் கொண்டது.

அத்துடன் மக்களின் இன்றைய தன்னெழுச்சிப் போராட்டங்களை ஆளும் வர்க்க சக்திகள் அடுத்து வரவுள்ள தத்தமது ஆட்சி அதிகார வேட்கைக்காகவும் நாடாளுமன்றப் பதவிகளுக்காகவும் பயன்படுத்த முன் நிற்பதையும் கட்சி காண்கின்றது.

எனவே 1978 இல் கொண்டுவரப்பட்ட இன்றைய அரசமைப்பைத் தூக்கி வீசி நாட்டுக்கும் மக்களுக்கும் முற்றிலும் சேவை செய்யக்கூடிய புதிய அரசமைப்பு வரையப்படுவது அவசியம் என்பதை இடதுசாரி, ஜனநாயக, முற்போக்கு சக்திகளும் கட்சிகளும் கவனத்தில் கொள்வதை எமது கட்சி வலியுறுத்துகிறது. அத்தகைய அரசமைப்பில் தேசிய பொருளாதாரம், தேசத்தின் இறைமை, சுதந்திரம், சுயாதிபத்தியம், தேசிய இனங்களின் சுயநிணர்ய உரிமை என்பன உள்ளடக்கப்படுவதைக் கட்சி வலியுறுத்துகிறது.

தேசிய பொருளாதாரத்துக்கான திட்டங்கள் நமது நாட்டுக்கும் அனைத்து மக்களுக்குமானதாக வகுக்கப்படல் வேண்டும். ஏகாதிபத்திய சக்திகள், பிராந்திய மேலாதிக்கவாத சக்திகள் மற்றும் வல்லரசுகளின் நலன்களுக்கு ஏற்றவாறும், உள்நாட்டு தரகு பெரு முதலாளிய நலன்களுக்கும் உரியவாறானதாக அரசமைப்பு அமையக்கூடாது.

அத்துடன் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு ஐக்கியப்பட்ட இலங்கையில் தேசிய இனங்களுக்கான சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்க்கப்படுவதை அரசமைப்பு உறுதி செய்ய வேண்டும்.

இவற்றுடன் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், அன்றாட உழைப்பாளர்கள், அரசாங்க, தனியார் துறை ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்து உழைக்கும் மக்களினதும் உரிமைகளுக்கும் நலன்களுக்கும் உரிய உத்தரவாதத்தைப் புதிய அரசமைப்பு வழங்க வேண்டும். இவற்றை உரியவாறு முன்னெடுப்பதற்கு உருவாக்கப்படும் தேசிய சபையில் உழைக்கும் மக்களின் பிரதிநிதிகள் இடம்பெறுகின்றமை கட்டாயமானதாகும். இவை அனைத்திற்குமான ஒரு பொது வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டு முன்னெடுக்கப்படுவதை கட்சி இம் மாநாட்டின் மூலம் வலியுறுத்துகிறது.

இந்த ஏழாவது மாநாட்டின் முடிவில் பதினெட்டுப்பேர் கொண்டபுதியமத்தியகுழுதெரிவுசெய்யப்பட்டமையுடன், அந்த மத்திய குழுவில் இரண்டு பெண் தோழர்கள் உள்ளிட்ட இளம் தலைமுறைத் தோழர்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி மத்திய குழு கூடி கட்சியின் நிர்வாகப் பொறுப்பிற்குரிய தோழர்களைத் தேர்ந்தெடுத்தது.

பொதுச் செயலாளராக சி.கா.செந்திவேலும், தேசிய அமைப்பாளராக வெ.மகேந்திரனும், பொருளாளராக தோழர் நீ.பிரதீபனும், சர்வதேச அமைப்பாளராக தோழர் நா.கிருஷ்ணப்பிரியனும் மேலும் ஏழு பேர் கொண்ட அரசியல் குழுவும் அந்தக் குழுவில் நான்கு நிர்வாகத் தோழர்களுடன் ஏனைய தோழர்களான டேவிட் சுரேன், சோ.தேவராஜா, க.தணிகாசலம் ஆகியோர் அரசியல் குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். அன்றாட வேலைகளுக்கான செயற்குழுமும் தெரிவு செய்யப்பட்டது.

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**

# பாட்டும் நானே? பாவமும் நானே!




1. **கேள்வி:-** நடந்து கொண்டிருக்கும் 'கயிறிழுப்பில்', மக்கள் போராளிக் குழுவினர், அரசினர் என்னும் இவர்களில் யார் வெற்றி பெற வேண்டும் என நினைக்கிறீர்கள்?

**பதில் :-** 'ஜன'நாயகம் வெல்ல வேண்டும் என்றே நான் நினைக்கிறேன். என்ன? என் பதில் புரிகிறதா?

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'ஜனம் - மக்கள்; நாயகம் - தலைமை.**
**வாரிதியார் தமிழை வச்சு விளையாடுறார்.**
**உதெல்லாம் எங்களுக்கு நல்லா விளங்குமுங்கோ!'**

2. **கேள்வி:-** ஜனாதிபதியால் அமைக்கப்பட்டிருக்கும் புதிய அமைச்சரவை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** சுருங்கச் சொல்வதானால், பலரும் சொல்வதுபோல, தலைவலி போகத் தலையணை உறையை மாற்றியிருக்கிறார். இதுவரை இருந்த அனுபவமுள்ள அமைச்சர்களையெல்லாம் துரத்திவிட்டுப் புதியவர்களைக் கொண்டு அமைச்சரவையை அமைத்திருக்கிறார் ஜனாதிபதி. இச்செயல் மூலம், முன்னைய அமைச்சர்கள் ஆளுமையற்றவர்கள் என்பதை மறைமுகமாக அவர் சொல்லியிருக்கிறார். நடந்த பிழைகளுக்குத் தலைவராகிய தான் பொறுப்பேற்காமல், கூட இருந்தவர்களைப் பொறுப்பேற்க வைத்திருப்பது நல்ல வேடிக்கைதான்!

புதிதாய்ச் சேர்ந்தவர்களில் பலர் தம் தாய்க்கட்சிக்குத் துரோகம் இழைத்துவிட்டு 'ஏதோ ஒன்று'க்காகத்தான் இங்கு வந்திருக்கிறார்கள். அந்த ஏதோ ஒன்று, எது என்பதை எல்லோரும் அறிவார்கள். தம்மை வளர்த்து விட்ட சொந்தக் கட்சிக்கே விசுவாசம் இல்லாத இவர்களா, இந்த நாட்டுக்கு விசுவாசம் காட்டுவார்கள்? காலக்கேட்டினால் பிழைக்கு மேல் பிழை செய்து கொண்டு போகிறார் ஜனாதிபதி. இதனைத்தான் 'விநாசகாலே விபரீத புத்தி' என்பார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'அப்ப இவ்வளவு நாளும் தலை இருக்க வால்கள்தான் ஆடிக்கொண்டிருந்தன என்கிறாரா ஜனாதிபதி? ஹி..ஹி..ஹி..!**

3. **கேள்வி:-** காலிமுகத் திடலில் நடக்கும் மக்கள் கிளர்ச்சியில், நீங்கள் உங்களது உறுபப்பினர்களுடன் சென்று கலந்து கொண்டீர்களாமே? அண்மைக்காலமாக, 'தமிழ் மக்கள் நடத்தும் போராட்டங்கள் எதிலும் கலந்து கொள்ளாத நீங்கள், இதில் மட்டும் கலந்து கொண்டமை நியாயமா?' என்று சிலர் கேட்கிறார்கள். உங்கள் பதில் என்ன?

**பதில் :-** சிலர் எனன் சிலர். பலரும் கேட்கிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். உங்கள் கேள்வியின் மூலம், அவர்கள் அனைவருக்குமாய்ப் பதில் சொல்ல விரும்புகிறேன். முதலில் தமிழ் மக்கள் நடத்திய போராட்டங்கள் ஒன்றிலும் நான் கலந்து கொள்ளவில்லை என்ற பொய்க் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்ல விரும்புகிறேன்.

இயக்கங்கள், கட்சிகள் என்பவை பின்னால் நிற்கின்ற, மக்கள் போராட்டங்களில்தான் நான் கலந்து கொள்வதில்லை. சரியான ஒரு கோரிக்கைக்காக, மக்கள் தனியே கிளர்ந்து போராடினால் நிச்சயம் அதில் நான் கலந்து கொள்வேன். அதற்கான சான்றொன்றை முதலில் சொல்கிறேன்.

முன்பொருமுறை அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலயத்தின் மேல் 'ஷெல்' வீச்சு நடத்தப்பட்டது. அந்தத் தாக்குதலில் அம்மையார் வளர்த்து வந்த ஆதரவற்ற பெண்பிள்ளைகள் இருவரும் கூட இறந்து போனார்கள். அதைக் கேள்விப்பட்டு அம்மையாரைக் காண அங்கு ஓடினேன். எப்போதும் கம்பீரமாக இருக்கும் 'துர்க்கா துரந்தரி' அவர்கள், ஆலயத்தின் முன் உள்ள 'குந்து' ஒன்றில் இடிந்து போய் உட்கார்ந்திருந்தார். அவர் நிலை கண்டு நான் கலங்கிப் போனேன்.

நடந்த அந்தச் சம்பவத்திற்கு, எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் எனறு நாம் முடிவு செய்தோம். மறுநாள் இந்து சமய நிறுவனங்கள் பலவற்றையும் ஒன்றிணைத்து நல்லை ஆதீனத்தில் ஒரு கூட்டம் நடாத்தினோம். எங்களது எதிர்ப்பை அரசுக்குத் தெரிவிக்க ஓர் ஊர்வலத்தை நடத்துவது என அக்கூட்டத்தில் முடிவு செய்தோம். பலரும் அதில் இணைந்தாலும் கிட்டத்தட்ட அந்த ஊர்வலத்தைக் கம்பன் கழகம்தான் முன்னின்று நடத்தியது. எங்கள் கழக உறுப்பினர்கள் ஓடித்திரிந்து கல்லூரிகள், இந்து சமய நிறுவனங்கள், கிறிஸ்தவ அமைப்புக்கள் எனப் பலவற்றையும் ஒன்று திரட்டினார்கள். பிரமாண்டமாய் யாழில் நடந்த ஊர்வலம் அது. அந்த ஊர்வலத்திற்குள்ளும் இயக்கம் தலைபோட முனைந்தது. இது தனியே மக்கள் போராட்டமாய் இருக்கவேண்டும் எனச் சொல்லி அவர்களை நாம் விலகி இருக்கச் செய்தோம். அதனால் அவர்கள் எம் மேல் சற்று மனங்கசந்ததும் உண்மை. எனக்குத் தெரிந்து எந்த இயக்கத்தினதோ அரசியல் கட்சிகளினதோ பங்களிப்பு ஏதும் இல்லாமல், மக்கள் தாமாகக் கிளர்ந்தெழுந்து நடத்திய போராட்டம் அது. நான் மேற்சொன்னவற்றில் உங்கள் முதல் கேள்விக்கான பதில் இதில் இருக்கிறது.

இனி காலிமுகத்திடலில் நடந்த போராட்டத்தில் நாம் கலந்து கொண்டதற்கான காரணங்களைச் சொல்கின்றேன்.

* முதலாவது காரணம்: அங்கு நடப்பது எந்தக் கட்சிப்பின்னணியும்இல்லாத மக்கள் கிளர்ச்சி என்பது.

*இரண்டாவது காரணம்: ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கூடியும், வன்முறைகள் ஏதுமின்றி, சாத்வீகமாகப் போராடுகிறார்கள் என்பது.

* மூன்றாவது காரணம் : இன்று நடந்து கொண்டிருக்கும் குழப்பங்களால் தமிழ் மக்களும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது.

* நான்காவது காரணம் : கிளர்ச்சி நடத்துகிறவர்கள் அனைத்து இன, மத மக்களையும் ஒன்றுபடுத்த முயல்கிறார்கள் என்பது.

*ஐந்தாவது காரணம்: தமிழ்மக்களை தங்கள் அடையாளத்தோடு வரும்படி அழைத்ததோடல்லாமல், தமிழில் தேசியகீதத்தையும் பாடவைத்து, பேரினத் தீவிரவாதிகளுக்கு எதிராகப் புரட்சி செய்திருக்கிறார்கள் என்பது.

*ஆறாவது காரணம்: இதுநாள்வரை அரசியல்வாதிகளால்தான், இந் நாட்டில் இனங்கள் பிரிக்கப்பட்டிருந்தன. முதன்முறையாக மக்களே வீதிக்கு இறங்கிப் போராடுவதோடல்லாமல் இனங்களுக்கிடையில் ஒற்றுமைக்கான முயற்சியையும் செய்கிறார்கள் என்பது.

* ஏழாவது காரணம் : அந்த மக்கள் போராட்டத்தில் எல்லா மதத்தவர்களும் தங்கள் அடையாளத்தோடு கலந்திருக்க, இந்து மதத்தவர்கள் மட்டும் தனித்திருந்தமை என்பது.

* எட்டாவது காரணம் : நடந்து முடிந்த பிழைகளை மட்டும் பேசிக்கொண்டிருந்து என்ன பயன்? பேரின மக்கள் சக்தி, நேசிப்போடு தமிழ் மக்களை நோக்கி நட்புக்கரம் நீட்டுகையில், அக் கரங்களை இறுகப் பற்றுவது எமது கடமை என்பது.

- இவையெல்லாம்தான், நானும் என் உறுப்பினர்களும் நம் சமய அடையாளங்களுடன் அங்கு சென்றமைக்கான காரணங்கள்.

நமது போராட்டங்களில் ஏன் கலந்து கொள்வதில்லை எனக் கேட்பவர்களுக்காய் மீண்டும் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். இதை வெளிப்படையாகச் சொல்வதற்காக முதலில் என்னை மன்னியுங்கள்!நம் மண்ணில் மக்கள் கிளர்ந்தெழுந்த போராட்டங்கள் என்று எதுவும் அண்மையில் நடந்ததாய்த் தெரியவில்லை. காணாமல் போனோர்களுக்கான போராட்டங்களிலும், அரசியல் கைதிகளுக்கான போராட்டங்களிலும் கூட மக்கள் தாமாகக் கிளர்ந்தெழுந்து கலந்து கொள்ளவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பங்களிப்பே அப்போராட்டங்களில் பெரும்பாலும் இருக்கிறது. அவற்றைக் கூடப் பின்னால் இருந்து சிலர் இயக்குவதாக வேறு சொல்கிறார்கள்.

தாம்தான் தமிழினத்தின் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் தமிழ் அரசியல்காரர்களால், தமிழ் மக்களைக் கிளர்ந்தெழச் செய்து, ஒரு மாபெரும் மக்கள் போராட்டத்தை இன்று வரை நடத்திக் காட்ட முடியவில்லை. அவர்கள் நடத்தும் பொதுக் கூட்டங்களில் கூட பெரிய அளவில் ஆள்கள் சேர்வதாய்த் தெரியவில்லை. அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வீரசிங்கம் மண்டபத்தில் நடத்திய 'மாபெரும்' ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் தொகையை, ஊடகங்களில் பார்த்து உலகமே சிரித்தது. இதுதான் நம் இன்றைய நிலை.

மாவீரர் நினைவேந்தலில் மக்கள் கூடவில்லையா? எனக் கேட்பீர்கள். அந்நிகழ்வுகளின் நிலையும் பெரும்பாலும் இப்படித்தான் ஆகிவிட்டது. அந்தப் போராட்டங்களைச் சிலபேர் கைப்பற்றித் தமதாக்கிய நிலையைக் கடந்த காலங்களில் காண முடிந்தது. காலாகாலமாக இனத்திற்காகப் போராடியவர்களை எல்லாம் கட்டாயமாக வெளியே நிறுத்திவிட்டு, நம் இனத்திற்கு ஒன்றுமே செய்யாத, புதிதாய் வந்த முன்னாள் முதலமைச்சரைக் கொண்டு 'ஈகைச்சுடர்' ஏற்றுவித்தது அக்கூட்டம். நடந்த அந்தக் குளறுபடியினைக் கண்டு பலரும் மனங்கசந்தனர். இவற்றையெல்லாம் பார்த்துத்தான் இக்கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் நாம் இருக்கிறோம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் சொல்றது வலிக்கிற உண்மைதான்! இதுவரை யாரும் வாயைத் திறந்து சொல்லாததைத் துணிந்து சொல்லியிருக்கிறார். 'வெல்டண்' வாரிதியார்.**

4. **கேள்வி:-** உலக நாணய நிதியத்தில் இலங்கைக்காகப் பொறுப்பு நிற்கவும் இந்தியா தயாராய் இருப்பதாய்ச் சொல்லப்படுகிறதே? இந்தியா இலங்கையிடம் திடீரெனக் காட்டும் அக்கறையைப் பார்த்தீர்களா?

**பதில்:-** அதைவிட்டுத் தள்ளுங்கள்! காலில் விழ வைத்து, பின் கட்டிப் பிடித்துக் கொள்வதில் இந்தியாவுக்கு நிகர் இந்தியாதான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * என்ன? இவர் இந்தியாவைக் கிண்டல் பண்ணுமாற் போல தெரிகிறதே. அப்ப இவர் 'றோ' இல்லையே? ஹி..ஹி..!**

5. **கேள்வி:-** உலகம் முழுவதிலும் உள்ள இலங்கையர்கள் ஒன்று திரண்டு, அரசுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில், நமது கூட்டமைப்புத் தலைவர்களில் சிலர் காலிமுகத்திடல் போராட்டங்களில் கலந்து கொள்வதற்கான நிபந்தனைகளை அடுத்தடுத்து விதித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தீர்களா?

**பதில்:-** புலிகளின் பெயர்களையும், நடந்து முடிந்த போராட்ட இழப்புக்களையும் சொல்லிச் சொல்லியே அரசியல் நடத்திவிடலாம் என்று இவர்கள் நினைக்கிறார்கள். போராட்டப் பாதிப்புக்களிலிருந்து தமிழ் மக்களை மீட்டெடுப்பதற்கான எந்த முயற்சியும் இதுவரை இவர்களால் செய்யப்படவில்லை என்பது வெளிப்படை. தேர்தல் காலத்தில் மட்டும் ஆளை ஆள் அடிபட்டுக் கொண்டு நாடாளுமன்றத்திற்குள் நுழையக் காட்டும் வேகத்தில், நூறில் ஒரு பங்கைக்கூட இன எழுச்சி முயற்சியில் இவர்கள் காட்டுவதில்லை.

அங்கு போய்ச் சிங்களவர்களுக்கு விளங்காமல் உணர்ச்சிகரமாகப் பேசுவதால் மட்டுமே, தங்களையும் தியாகிகள் போலக்காட்டி நம் தமிழ் மக்களை இவர்கள் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஏமாற்று வேலையில் ஒன்றுதான் இப்போது இவர்கள் விதிக்கும் நிபந்தனைகள். போராட்டம் நடத்துகிறவர்கள் பொதுமக்கள். ஏதோ அரசியல் கட்சியிடம் கோரிக்கை விடுவது போல, அவர்களிடம் நிபந்தனைகள் விதித்து வேடிக்கை காட்டும் இவர்களை என்ன சொல்ல?

**உலகநாதரின் ஒப்பீனியன் * இந்த ஆளுக்கு வேலை இல்லை... 'வெறுஞ் சட்டிக்குள் இருந்து சோத்தைக் கொண்டா' என்றால், அவர்களும் தான் பாவம் என்ன செய்வார்கள? 'வாழ்ந்து போதீரே' என விட வேண்டியதுதான்.**

(10ஆம் பக்கம் பார்க்க)

# கதிரைகளை மாற்றுவதன் மூலம் நாட்டு நிலையை சீர்படுத்தமுடியாது

## மட்டு. மாநகர முதல்வர் சரவணபவன் தெரிவிப்பு

பிராந்தியங்களுக்கான அதிகாரங்களை வழங்குவதன்மூலம் மட்டுமே இந்த நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

ரம்புக்கணை துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இது போன்ற சம்பவங்களை நாங்கள் எதிர்பார்க்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு நினைவுதினத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமானவர்கள் இதுவரையில் கண்டு பிடிக்கப்படவில்லை. அதற்கான நீதிவிசாரணைகூட முன்னெடுக்கப்படவில்லை. இது தொடர்பில் கிறிஸ்தவ சமூகமும் ஆத்திரமடைந்தநிலையில்பாப்பரசரிடம் முறையிட்டுள்ளனர்.

இதுபோன்றபலபடுகொலைகளுக்கு இலங்கை அரசாங்கத்திடமிருந்து எந்த வித நீதியும் கிடைக்கவில்லை. குறிப்பாக தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளுக்கு எந்த நீதியும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் எந்த அரசாங்கம் எந்த மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்து தெரிவுசெய்தார்களோ அந்த மக்களே இந்த அரசாங்கத்தை வீட்டுக்குச் செல்லுமாறு கோஷம் எழுப்புகின்றனர். ஆனால், இந்த அரசாங்கம் அதனைக் கவனத்தில் கொள்ளாமல் புதிய அமைச்சரவையை நியமித்துள்ளது.

மக்கள் அரசாங்கத்தை வெளியே செல்லுமாறு ஆர்ப்பாட்டம் செய்யும் இந்த நிலையில் புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது. மக்கள் பொருளா தார ரீதியாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கையின் டொலர் பெறுமதி மிகவும் அதிகரித்த நிலையிலுள்ளது. இதன் காரணமாக மக்களின் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துவருகின்றது. பொருள்களுக்காக வீதியில் நிற்கவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. பெரும்பாலான நேரங்கள் பொருள்களை வரிசையிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு செலவிடப்படுகின்றன.



இந்த நிலையில் தோல்வியைத் தழுவிக்கொண்ட அரசாங்கம் வீட்டுக்கு செல்லாமல் மக்களை மேலும் துன்பப்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது.

அண்மையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார். இதுபோன்ற பல சம்பவங்களை நாங்கள் எதிர்பார்க்கலாம். காலிமுகத்திடலில் பாரியளவிலான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

மக்கள் எழுச்சிகளை மதித்து இந்த அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு தேர்தலுக்குச்செல்லவேண்டும். தேர்தலுக்குச் செல்லமுன்னர் அரசமைப்பு மாற்றம் ஒன்றை செய்யவேண்டிய அவசியம் உள்ளது. வெறுமனே கதிரைகளை மாற்றுவதன் மூலம் மட்டும் இந்த நாட்டின் நிலையை சீர்படுத்தமுடியாது. பிராந்தியங்களுக்கான அதிகாரங்களைவழங்குவதன்மூலம் மட்டுமே இந்த நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தமுடியும். அவ்வாறான நிலையேற்படும்போது பிராந்தியங்கள் முன்னேற்றமடையும்போது ஒட்டுமொத்த இலங்கையினதும் பொருளாதாரம் வளர்ச்சியடையும்.

விவசாயக் கொள்கை தோல்வியடைந்துள்ளது என்று ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார்.

அரசாங்கத்தின் அனைத்துக் கொள்கைகளும் தோல்வியடைந்துவிட்டன. இலங்கையின் அனைத்து பகுதிகளும் பொதுமக்கள் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு மதிப்பளித்து இந்த அரசாங்கம் வீடுசெல்லவேண்டும். – எனத் தெரிவித்தார்.

## நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் எந்த நேரத்திலும் செயலிழக்கும் அபாயம்

நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையம் எந்த நேரத்திலும் செயலிழக்கும் அபாயம் உள்ளதென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மின் நெருக்கடி காரணமாக நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையம் தொடர்ச்சியாக மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளமையால் சுமார் 15 அத்தியாவசிய பராமரிப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் மின் உற்பத்தி நிலையம் எந்த நேரத்திலும் செயலிழக்கும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மின் உற்பத்தி நிலையங்கள் மூன்று 300 மெகாவாட் இயந்திரங்கள் மூலம் தேசிய கட்டமைப்பிற்கு சுமார் 900 மெகாவாட்களை சேர்க்கின்றன. மேலும் ஒவ்வொரு அமைப்பிலிருந்தும் அவ்வப்போது அகற்றி பராமரிப்பது வழக்கமான நடைமுறை என்று இலங்கை மின்சார சபை பொறியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் நிலவும் கடும் வறட்சி காரணமாக நீர்மின் உற்பத்தி குறைந்தளவிலேயே குறைந்துள்ளமையுடன், அனல் மின் நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் அன்றாட மின் தேவைக்குப் போதுமானதாக இல்லை.

இதனால் நிலக்கரி அனல்மின் நிலையத்தின் மூலம் உற்பத்தியாகும் மெகாவோட் மின்சாரம் முழுவதையும் தேசிய மின்கட்டமைப்பில் சேர்க்க வேண்டியுள்ளமையால், கடந்த சில மாதங்களாக இந்த இயந்திரங்களை தொடர்ந்து இயக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் திடீரென செயலிழந்தால் அதற்கு தாம் பொறுப்பேற்கத் தயாரில்லை எனவும் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் பரிசுத்த பாப்பரசரை சந்திக்க புறப்பட்டனர்

பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸின் சிறப்பு அழைப்பின்பேரில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட 60 பேர் வத்திக்கானுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளனர்

நேற்று (வெள்ளிக்கிழமை) காலை அவர்கள் கட்டுநாயக்கவின் ஊடாக வத்திக்கானுக்குப் புறப்பட்டுச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களைக் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அழைத்துச் செல்கிறார்.

ஏற்கனவே, கர்தினால் மல்கம் ரஞ்சித், வத்திக்கானுக்கு சென்று உயிர்த்த ஞாயிறுதாக்குதல்களின்விசாரணைகள் அதில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் தொடர்பாக பாப்பரசருக்கு விளக்கமளித்திருந்தார்.

இதனையடுத்தே தாக்குதல்களின் போது பாதிக்கப்பட்டவர்களை வத்திக்கானுக்கு அழைத்துச் செல்லும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

## ரம்புக்கனையில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவரின் மனைவியின் கண்ணீர் சாட்சியம்

றம்புக்கனையில் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தவரின் இறுதி கிரியையில் உயிரிழந்தவரின் மனைவியின் நிராகரிப்பையும் மீறி இராணுவத்தினர் செயற்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட கணவரின் இறுதிக் கிரியைகளுக்கு உதவ அழைக்கப்படாத இராணுவ குழுவொன்று வந்தது எனவும், தான் உதவி தேவையில்லை எனக் கூறிய போதிலும் கூடாரம் அமைத்து உணவு கொண்டு வந்து தருகிறோம் என கூறினார், பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட சமிந்த லக்ஷனின் மனைவி சமன் குமாரி கேகாலை நீதிவான் வாசனா நவரத்ன முன்னிலையில் வாக்குமூலம் அளித்துள்ளார்.

தனது கணவர் இராணுவத்திலோ அல்லது பாதுகாப்புப் படையிலோ பணியாற்றவில்லை எனவும் இறுதிச் சடங்கிற்கு இராணுவத்தின் உதவி தேவையில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இராணுவக் குழுவொன்று காலையிலேயே வீட்டுக்கு வந்தது எனவும், அகற்றி செல்லுமாறு கூறிய போதிலும் கூடாரம் இன்னமும் அங்கேயே இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமன் குமாரியின் கண்ணீர் சாட்சி வருமாறு –

'எனக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். எரிபொருள் நிரப்பப் போகிறேன் என கணவர் கூறிவிட்டு சென்றார். அப்போது ஒருவர் எனக்கு தொலைபேசி அழைப்பு மேற்கொண்டு உங்கள் கணவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் எனக் கூறினார்.

நான் கேகாலை வைத்தியசாலைக்குச் சென்றேன். கணவரை வைத்தியசாலை தள்ளுவண்டியில் பார்த்தேன். பின்னர் நான் வீட்டுக்கு வந்துவிட்டேன். நாங்கள் வீட்டில் இருந்தபோது, ஆயுதம் ஏந்திய இராணுவத்தினரை ஏற்றிக்கொண்டு இராணுவ ட்ரக் ஒன்று எங்கள் வீட்டுக்கு வந்தது. அங்கு சுமார் 20 பேர் இருந்தனர். அவர்களில் இரண்டு பேர் நட்சத்திரம் பதித்த ஆடை அணிந்த இரண்டு உயர் அதிகாரிகளாவர்.

அவர்கள் என்னிடம், 'நாங்கள் உங்களுக்கு உதவ வந்தோம். நாங்கள் எல்லாவற்றையும் செய்வோம். ' எனக் கூறி ஒரு கூடாரத்தைக் கொண்டு வந்து அடித்தார்கள். அவர்கள் எங்களுக்கு உணவும் பானமும் கொண்டு வந்தனர்.

எனது கணவர் இராணுவத்திலோ அல்லது பாதுகாப்புப் படையிலோ இல்லை, எனவே உங்கள் உதவி எனக்குத் தேவையில்லை என அவர்களிடம் கூறினேன். அவர்கள் சென்றுவிட்டனர். கடந்த வியாழக்கிழமை காலையும் அந்தக் குழு எங்கள் வீட்டுக்கு வந்தது. நான் அவர்களிடம், நீங்கள் இங்கு வரவேண்டிய அவசியமில்லை எனக் கூறினேன். எனினும் இன்னமும் அந்தக் கூடாரம் அகற்றப்படவில்லை.

என் கணவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இது கடைசி மரணமாக இருக்கப்போவதில்லை. மேலும் பலரைச் சுட்டுக் கொன்று விடுவார்கள். எனவே என் கணவருக்கு நீதி வழங்குங்கள். அவர்கள் சீருடை மற்றும் நட்சத்திரங்களை அணிந்த கொலைகாரர்கள் என சமிந்த லக்ஷனின் மனைவி சமன் குமாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## நாட்டிலுள்ள சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு நிதியுதவி வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்!

நாட்டிலுள்ள சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு நிதியுதவி வழங்கும் வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக ஐரோப்பிய ஒன்றியத்தால் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன் கீழ், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத்துறையை புத்துயிர் பெறும் நோக்கில், அத்தகைய தொழில்முயற்சியாளர்களுக்கு தலா 10 லட்சம் ரூபாவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முதல் மூன்று தொழில்முனைவோருக்கு கடந்த வியாழக்கிழமை நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகம் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், சுற்றுலாத் துறையிலுள்ள 60 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு அடுத்த இரண்டு மாதங்களில் தலா 10 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

பொருளாதாரத்தில் எதிர்மறையான போக்கு குறைக்கப்படுவதையும், குறிப்பாக ஆபத்திலுள்ள மக்களின் நலன் கருத்தில் கொள்ளப்படுவதையும் இது உறுதி செய்யும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டின் சுகாதாரத் துறையின் மேம்பாட்டுக்காக தொடருதவி வழங்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி

கொழும்பு, ஏப். 23

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கையின் சுகாதார அமைச்சுக்கு பல அம்புலன்ஸ்கள் மற்றும் வாகனங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

நன்கொடையாக கிடைக்கப்பெற்றுள்ள அம்புலன்ஸ்கள் நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று சுகாதார, போசாக்கு மற்றும் வைத்தியத்துறை முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

கடந்த சில ஆண்டுகளாக பாதிக்கப்பட்டு வரும் இத்துறையை முன்னெடுத்துச் செல்ல அரசால் போதிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. நோயாளர்களுக்கு உதவுவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படும் இந்த நன்கொடையின் முக்கியத்துவத்தை வைத்தியர் ராஜித சேனாரத்ன வலியுறுத்தினார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி நீண்டகாலமாக நாட்டின் சுகாதாரத் துறைக்கு தொடர்ந்து உதவி வருகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக 25 அம்புலன்ஸ்கள் மற்றும் 38 வாகனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

நான் பதவி வகித்த காலத்தில் நான் 350 அம்புலன்ஸ்கள் சுகாதார அமைச்சகத்திற்கு கொண்டு வந்தேன். அந்த அம்புலன்ஸ்கள் அனைத்தும் ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட பென்ஸ் மற்றும் ஃபோர்டு அம்புலன்ஸ்கள் ஆகும்.

தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ள அம்புலன்ஸ்கள் ஜப்பானில் தயாரிக்கப்பட்ட அம்பூலன்ஸ்கள் ஆகும். அவை அம்புலன்ஸ்கள் அல்ல வான்கள் ஆகும் பல்வேறு உபகரணங்கள் இணைக்கப்பட்டு அம்புலன்ஸ்களாக மாற்றப்பட்டவையாகும். ஆனால் என்னுடைய பதவிக் காலத்தில் நான் கொண்டுவந்தவை அம்புலன்ஸ்களுக்காகவே தயாரிக்கப்பட்ட அசல் அம்புலன்ஸ் பிரத்தியேக வாகனங்கள் ஆகும்.

இது தொடர்பாக இலங்கை சுகாதார தொழிற்சங்க ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவிக்கையில் –

நாட்டின் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் போதுமான பணத்தைச் செலவிடவில்லை. அரசாங்கம் செலவிடும் தொகை 'சுகாதாரத்துறையின் தரத்தை கொண்டு நடத்தவோ அல்லது அதன் தரத்தை உயர்த்தவோ போதுமானதாக இல்லை என்று இலங்கை சுகாதார தொழிற்சங்க ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் சுட்டிக்காட்டுகிறார்.

'ஆசிய அபிவிருத்தி வங்கியால் நமது நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள் நமது நாட்டின் சுகாதாரத் துறைக்கு கிடைக்கபெறும் நன்கொடைகளில் மிகப்பெரிய நன்கொடையாகும்.

எமது நாட்டின் சுகாதாரத் துறையின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு செயற்படும் நிறுவனமே ஆசிய அபிவிருத்தி வங்கியாகும். சுகாதார சேவைகளுக்காக எமது நாட்டு அரசின் வரிப்பணத்தால் ஒதுக்கப்படும் தொகை இந்த சுகாதார சேவையின் தரத்தைப் பேணுவதற்கு போதுமானதாக இல்லை என்பதை நாம் அறிவோம்.

ஆசிய அபிவிருத்தி வங்கியால் சர்வதேச ரீதியாகக் கவனம் செலுத்தும் முக்கிய நாடுகளில் இலங்கையும் ஒன்று. ஆசிய அபிவிருத்தி வங்கியின் எமது நாட்டின் சுகாதார துறையின் வளர்ச்சிக்கு – மேம்பாட்டுக்காக – சில திட்டங்களை கொள்கைகளை முன்னெடுக்கும் அவை சிறந்த ஒன்றாகும்.

இந்த அரசாங்கத்தால் கடந்த இரண்டரை வருடங்களாக சுகாதாரத் துறையின் வளர்ச்சிக்காக எந்த ஒரு செயற்திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, எந்த ஒரு வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்காமல் இருக்கும் அரசாங்கத்துக்கு அசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்டுள்ள குறித்த நன்கொடை உண்மையிலேயே ஒரு சிறந்த சேவை என்று நான் நினைக்கிறேன்.

சுகாதார சேவைகளை மேம்படுத்துவதில் சர்வதேச அளவில் கவனம் செலுத்தப்பட்டு உலகின் ஏனைய நாடுகளைப் போன்று இலங்கையும் சுகாதாரத் துறையில் கொள்கை வகுப்பில் முன்னேறி வருகின்றது.

இந்த நிறுவனம் போன்றே மற்றும் பல நிறுவனங்களும் எங்களுக்கு உதவுகின்றன. குறிப்பாக நமது நாட்டில் ஆரம்ப சுகாதாரத் துறையின் வளர்ச்சிக்கு ஆசிய வளர்ச்சி மேம்பாட்டு நிதியத்தின் பங்களிப்பு மகத்தானது.

எமது சுகாதார அமைச்சு ஆசிய அபிவிருத்தி வங்கியை நாம் நினைத்துக் கூடப் பார்க்காத அளவிற்கு அடிப்படை ஆரம்ப சுகாதாரத் துறையை அதிகரிப்பதற்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றோம்.

ஏனெனில் எமது நாட்டில் தற்போது தொற்றாத நோய்களில் அதிக கவனம் செலுத்தாது தொற்றும் நோய்களில் கவனம் செலுத்தப்படுகின்ற ஒரு நிலையையே பார்க்கின்றோம். இலங்கையில் தொற்றா நோய்கள் காரணமாகவே சராசரியாக நூற்றுக்கு 82 வீதம் தொடக்கம் 83 வீதமான மரணங்கள் பதிவாகின்றன.

எனவே ஆரம்ப சுகாதார நிலையத்தின் மூலம்தான் தொற்றாத நோய்களைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் முடியும். நம் நாட்டில் உள்ள முக்கிய வைத்தியசாலைகளில் மக்கள் படும் அளெசகரியம் போன்று பிரதான வைத்தியசாலைகளில் வழங்கப்படும் சேவைகளுக்கு அப்பாற்பட்ட நோய்களையும் தடுக்க ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள வசதிகள் மிகவும் மோசமாக உள்ளன. என்றும் தெரிவித்துள்ளார்.

# கென்யாவிற்கான உயர்ஸ்தானிகர் மீதான குற்றச்சாட்டு ஆதாரமற்றது

## நட்டஈடு கோரி ஹிருணிகாவிற்கு கடிதம்



தனக்கு எதிராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை எனவும் அது புனையப்பட்டவை எனவும் கென்யாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சட்டத்தரணி வேலுப்பிள்ளை கனநாதன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் மீளப்பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அல்லது உரிய நட்டஈடு செலுத்த வேண்டும் எனவும் அவர் தனது சட்டத்தரணி ஊடாக ஹிருணிகா பிரேமச்சந்திரவிற்கு அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் திருப்பதிக்கு பயணித்த ரி 7 ஜே.எஸ்.எச். இலக்கம் கொண்ட ஜெட் விமானத்தின் உரிமையாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என ஹிருணிகா பிரேமச்சந்திர குறிப்பிட்டுள்ளார் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வேலுப்பிள்ளை கனநாதன் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் என்றும், உகண்டாவில் உள்ள சிலோன் கபேயின் உரிமையாளராகவும் இருந்தார் எனவும், ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார் எனக் கூறப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த குற்றச்சாட்டுகள் முற்றிலும் ஆதாரமற்றவை மற்றும் புனையப்பட்டவை என்று வேலுப்பிள்ளை கனநாதன் தெரிவித்துள்ளார்.

வேலுப்பிள்ளை கனநாதன் உகண்டாவிலும் பல ஆபிரிக்க நாடுகளிலும் நன்கு அறியப்பட்ட தொழிலதிபர் என்றும், 1987 முதல் உகாண்டாவில் நீண்ட காலம் வாழ்ந்த அவர் என்றும் நல்ல நிறுவன, அரசியல் மற்றும் சமூக நற்பெயரைக் கொண்டிருக்கிறார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹிருணிகா பிரேமச்சந்திரவின் அவமதிப்புக் கூற்றால் எனது வாடிக்கையாளருக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதோடு இதன் மதிப்பீடு 50 கோடி ரூபா என்று கனநாதனின் சட்டத்தரணி கூறியுள்ளார்.

இந்நிலையில், எதிர்வரும் 27 ஆம் திகதி ஹிருணிகா பிரேமச்சந்திர பகிரங்கமாக தனது குற்றச்சாட்டுகளை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவ்வாறு இல்லாவிடின் நட்டஈடை செலுத்த வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திருப்பதிக்கு செல்வதற்காக வேலுப்பிள்ளை கனநாதன் தனது பிரத்தியேக ஜெட் விமானத்தை வழங்கியுள்ளார் எனத் தகவல்கள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு உதவுகின்றது யு.என்.டி.பீ!

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் விளைவுகளைத் தணிக்க ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் தனது ஆதரவை வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்காக வொஷிங்டனில் இருக்கும் நிதியமைச்சர் அலி சப்றி மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்ட நிர்வாகி அச்சிம் ஸ்டெய்னர் ஆகியோருக்கு இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போதே ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்ட நிர்வாகி அச்சிம் ஸ்டெய்னர் சாதகமான பதிலை வழங்கியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய கடன் நெருக்கடிக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவ ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 70 அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு வைத்தியசாலைகளில் பெரும் தட்டுப்பாடு!

கொழும்பு, ஏப். 23

சுமார் 70 அத்தியாவசிய மருந்து பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தனியார் வைத்தியசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளின் கூட்டமைப்பு இதனைத் தெரிவித்துள்ளது.

இவ்வாறு பற்றாக்குறையாகக் காணப்படும் மருந்துப் பொருள்களைத் தனியார் துறையினர் பெற்றுக்கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு குறித்த கடிதத்தில் கோரப்பட்டுள்ளது

**ஈழத்துக் கவிதை இலக்கிய வரலாற்றில்**

# மரியசேவியர் அடிகளின் பணி; மெய்நிகர் ஆய்வரங்கம் நாளை

யாழ்ப்பாணம், ஏப். 23

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக 'கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகள் ஒரு பன்முகப் பார்வை' என்னும் தலைப்பில் மெய்நிகர் வழியில் சூம் செயலிக்கூடாக திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற ஆய்வரங்கத் தொடரின் பத்தாவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு (இலங்கை நேரம்) இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் 'ஈழத்துக் கவிதை இலக்கிய வரலாற்றில் மரிய சேவியர் அடிகளின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் யாழ்.பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியரும், கலை இலக்கிய செயற்பாட்டாளருமான திரு.ந.குகபரன் ஆய்வினை வழங்கவுள்ளார்.

ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 7893644809, கடவுச் சொல் cpa என்பதற்கூடாக இந்நிகழ்வில் இணைந்து கொள்ள முடியும்.

# ஆர்ப்பாட்டக்காரரின் போராட்டத்துக்கு வீதித்தடைகளை ஏற்படுத்தவேண்டாம்

## இராணுவத் தளபதி உத்தரவு



இலங்கை மக்கள் சகலரினதும் நலன்களைக் கருத்திற்கொண்டு 24 மணிநேரமும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் இலங்கை இராணுவம் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் பொதுமக்களிடம் வீதி மறியல்களை ஏற்படுத்த வேண்டாமென கோரிக்கை விடுக்கிறது.

அதற்கமைய பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவால் கடந்த வியாழக்கிழமை மதியம் விடுக்கப்பட்ட விசேட அறிக்கையில், கொவிட் - 19 நோய்ப் பரவல் உக்கிரமடைந்திருந்த போதும் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தின் போதும் பொதுமக்களால் படையினருக்கு வழங்கப்பட்ட ஆதரவு தொடர்பில் நினைவு கூர்ந்துள்ளார்.

இந்நிலையில் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்ற மக்கள் அமைதியான முறையில் போராட்டங்களுக்கு மத்தியில் அவற்றுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் எரிபொருள் விநியோகம் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்துச் செயற்பாடுகளுக்கும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் அத்தியாவசியப் பொருள்களின் விநியோகச் செயற்பாடுகளுக்கு தடைகளை ஏற்படுத்தும் முயற்சிகள் சில தரப்புக்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதனால் பொலிஸ்மா அதிபரின் வேண்டுகோளுக் கிணங்க போக்குவரத்துச் செயற்பாடுகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்காக இராணுவம் மற்றும் ஏனைய படையினரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் புதன்கிழமை பொது மக்கள் சிலர் தாமாகவே முன்வந்து வீதித்தடைகளை அகற்றுவதையும் அவதானிக்க முடிந்ததையிட்டு அதற்காக பொது மக்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறோம் எனவும் தெரிவித்தார்.

அதனால் அண்மையில் ஏற்பட்ட கொவிட் - 19 தொற்றுநோய் பரவல் உக்கிரமடைந்திருந்த வேளையில் படையினருக்கும் பொலிஸாருக்கும் வழங்கிய ஒத்துழைப்புக்களைப் போன்றே தற்போதைய நெருக்கடியின் போதும் ஒத்துழைப்புக்களை வழங்குமாறும் பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கிறோம்.

அதனால் வீதி மறியல்களைத் தவிர்த்து பொது மக்களுக்கு அவசியமான அத்தியாவசியப் பொருள்களின் போக்குவரத்துச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக முழுமையான ஆதரவை வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன் என இராணுவத்தளபதி வெளியிட்டுள்ள அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொலிஸ் அதிகாரி விபத்தில் சாவு!

வீதி விபத்தில் படுகாயமடைந்த பொலிஸ் விசேட பணியகத்தின் புத்தளம் பிரிவு பொறுப்பதிகாரி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கல்பிட்டி - மாம்புரி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி புத்தளம் - அநுராதபுரம் வீதியில் சிரம்பியடிய பிரதேசத்தில் பொலிஸ் பரிசோதகர் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிள் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

காயமடைந்த பொலிஸ் பரிசோதகர் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பொலிஸ் பரிசோதகர் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் உயிரிழந்துள்ளார்.

புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மின்சார நெருக்கடிக்கு விரைவில் தீர்வு கிட்டும்

பாடசாலைகளுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை அச்சிடும் பணி தற்போது பூரணமடைந்துள்ளாா் என அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

புத்தகங்களை பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டமும் இறுதிக் கட்டத்தை அண்மித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அடுத்த மாதம் நடுப்பகுதியை அண்மிக்கும் போது மின்சார நெருக்கடியை இயலுமான அளவு தீர்க்க முடியும் என்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரன நம்பிக்கை தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மின்சார நெருக்கடியால் பாதிப்படைவார்கள் என்று எதிர்க்கட்சி நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியது.


இதற்கு பதிலளித்த அமைச்சர் அடுத்த மாதத்தை அண்மிக்கும் போது நாள் ஒன்றில் இரண்டு மணி நேரம் மாத்திரம் மின் துண்டிக்கப்படலாம் என்றும் கூறினார்.

## கொஸ்கொட பகுதியில் துப்பாக்கிச் சூடு 28 வயது இளைஞன் பரிதாபகர சாவு!

கொஸ்கொட - ஆரண்ய பகுதியில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் 28 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இனந்தெரியாத நபர் ஒருவரால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொலிஸ் மா அதிபர் நேற்று ஆஜர்



பொலிஸ்மா அதிபர் சி டி விக்ரமரத்ன மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னிலையாகி உள்ளார்.

ரம்புக்கனையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் சிலர் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி அதிகாரிகளை நேற்று முற்பகல் 11 மணிக்கு ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, பொலிஸ் மா அதிபர், மத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், கேகாலை மற்றும் ரம்புக்கனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் ஆணைக்குழுவில் முன்னிலையாகியுள்ளனர்.

கடந்த 19ஆம் திகதி ரம்புக்கனை ஆர்ப்பாட்டத்தின் போது பிரதேசவாசிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளுக்காக அவர்கள் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர் என மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு சம்பவ இடத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளமையுடன், குறித்த குழு சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையில் மனித உரிமைகள் ஆணைக் குழு அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை வழங்கவுள்ளது.

ரம்புக்கனையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் நாரண்பெத்த பிரதேசத்தைச் சேர்ந்த சமிந்த லக்ஷன் என்பவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாட்டும் நானே?...




(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

6. **கேள்வி:-** ரஷ்யாவைப் போர்க்குற்றவாளியாய்ப் பிரகடனப்படுத்த வேண்டும் என்கிறதே அமெரிக்கா?

**பதில் :-** சட்டியைப் பார்த்துப் பானை சிரித்த கதைதான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ 'ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் காணின்' வள்ளுவத் தாத்தாவை உலகநாதர் வழிமொழிகிறார்.**

7. **கேள்வி:-** உக்ரைனின் வீழ்ச்சியைப் பார்த்துக் கொஞ்சமேனும் கவலைப்படமாட்டீர்களா?

**பதில் :-** மூன்றாம் உலக யுத்தம் தொடங்கி, உலகம் முழுவதும் வீழ்ந்து விடப்போகிறதே என்ற கவலையில் நான் இருக்கிறேனாக்கும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ 'உலக யுத்தம் வரும், ஆனா வராது...'**

8. **கேள்வி:-** மக்கள் போராட்டக் களத்தைக் களியாட்டக் களமாக்குவது தவறல்லவா?

**பதில்:-** உங்கள் பார்வை தவறானது. பல நாள்கள் இராப்பகலாக நின்று போராடுவோர், சோர்ந்து விடாமல் இருப்பதற்கே அந்தக் களியாட்டங்கள் நடத்தப்படுகின்றன. அந்தக் காலத்தில் இந்திய - சீன யுத்தத்தின்போது, சினிமா நடிகர்களைப் போர்க்களத்திற்கு அழைத்துச் சென்று, கலை நிகழ்ச்சிகள் எல்லாம் நடத்தினார்கள். தமிழ்நாட்டில் இருந்து சிவாஜி, பத்மினி போன்ற பெரியநடிகர், நடிகைகள் எல்லோரும் கூட, அந்நிகழ்வுகளில் கலந்து கொண்டார்கள். இராமன் கடற்பாலம் கட்டும்போது ஓர் அணில், தன் பங்களிப்பாகத் தன் உடம்பில் ஈரம் தோய்த்து மணலில் புரண்டு ஒட்டிய மணலைக் கொண்டுவந்து கடலில் இட்டதாம். போராட்டத்தில் அவரவர் தத்தம் திறனுக்கேற்பப் பங்களிப்பதில் தவறில்லை என்றே நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ உலகநாதரும் வாரிதியாரின் கருத்தை ஒத்துக் கொள்கிறார்.**

9. **கேள்வி:-** கடைசியாக அரசின் துப்பாக்கிகள் தன் மக்களின் மீதே திரும்பி விட்டதைப் பார்த்தீர்களா?

**பதில் :-** மனம் நொந்திருக்கும் இவ்வேளையில், சொல்லிக்காட்டுவது தவறுதான். ஆனாலும் சொல்ல வேண்டியிருக்கிறது. இதுநாள்வரை அரசினர் இந்த நாட்டின் பிரஜைகளான தமிழர்களை எதிரிகளாய்க் கருதிக், கொன்று குவித்தார்கள். அப்போது அதைச் சிங்கள மக்கள் வாய்மூடி வேடிக்கை பார்த்தார்கள். இன்று அதே நிலை அவர்களுக்கும் ஏற்பட்டு விட்டது. இப்போது தமிழர்களின் வலி அவர்களுக்குப் புரிந்திருக்கும். ஆனால் ஒன்று. இந்நேரத்தில் நடந்தவற்றைப் பேசாமல், அவர்களுடன் நாம் தோளோடு தோள் நின்று, தமிழர்களின் நாகரீகச் சிறப்பைக் காட்ட வேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ 'முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில் முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்' - பாரதி**

## கோட்டா - மஹிந்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போதைய நிலையில் ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்டிக் குறைப்பதன் மூலம் அரசுக்கு எதிராக மக்களின் சீற்றத்தைத் தணிக்கலாம் என்று கருதும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதற்காக அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நீக்கி 19 ஆவது திருத்த ஏற்பாடுகளை மீண்டும் கொண்டு வருவதற்கான முயற்சிகளைத் தன்பாட்டில் முன்னெடுத்து இருக்கிறார் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறு ஜனாதிபதியின் அதிகாரத்தை வெட்டி குறைக்கும் முயற்சியை தன் அனுமதி இல்லாமல் – அல்லது தன்னோடு கலந்தாலோசனை செய்யாமல் – பிரதமர் முன்னெடுத்து இருப்பது ஜனாதிபதியை சீற்றத்துக்கு உள்ளாக்கி இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேசமயம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைப் பதவி விலக்குவதன் மூலம் ஆட்சி அதிகாரத்தில் ஒரே ராஜபக்ஷவாகத் தான் மட்டுமே இருப்பதை மக்களுக்குக் காட்டி, ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டு விட்டதாகத் தெரிவித்து, மக்களைச் சமாளிக்கலாம் என்று ஜனாதிபதி கோட்டாபய கருதுகிறார் எனத் தெரிகிறது. இதற்கான காய்நகர்த்தல்களை தனக்குச் சாதகமான எம்.பிக்கள் மூலம் அவர் முன்னெடுக்கிறார்கள் என பிரதமர் கருதுகின்றார்.

இடைக்கால அரசு ஒன்றை நிறுவுவதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு விலக்கப்பட வேண்டும் என்று டலஸ் அழகப்பெரும உட்பட சிலர் அரசுக்குள் வலியுறுத்துகின்றனர். அத்தகையோர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நேரடி வழிகாட்டலில் இந்த வழிமுறையை வெளிப்படுத்துகின்றனர் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தரப்பு கருதுகிறது.

புதிய வாரத்தில் அரசின் இரண்டு பெரும் தலைவர்களுக்கும் இடையிலான முரண்பாட்டின் பிரதிபலிப்புகள் அப்பட்டமாக வெளிப்படும் என விடயமறிந்த கொழும்பு வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

### டலஸின் கடிதம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் தற்போதைய அமைச்சரவையும் உடனடியாகப் பதவி விலக வேண்டுமென ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அவர் நேற்று முன்தினம் பிற்பகல் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

தற்போதைய அமைச்சரவை பதவி விலகியதன் பின்னர் அனைத்துக் கட்சிகளையும் கொண்ட இடைக்கால அரசாங்கத்தை அமைக்கவேண்டும். அந்த அமைச்சரவை சிறியதாக அமைய வேண்டும் என்பதுடன் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் இதில் ஆராயப்படவேண்டும் என்றும் டலஸ் அழகப்பெரும ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேரில் சந்தித்துப் பேசிய பின்னரே இத்தகைய கடிதம் ஒன்றை எழுத்தில் அவர் அனுப்பியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### இரகசியக் காய் நகர்த்தல்

ஆளுங்கட்சிக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை அருகியுள்ள நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்க்கு இரகசியப் பேச்சுகள் நடந்து வருகின்றன என உயர் மட்ட அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

அரச தலைவர்களுக்கு எதிரான மாநாயக்க தேரர்களின் அறிக்கை, ஆளுங்கட்சியின் மேலும் 13 எம்.பிக்கள் சுயாதீனமாக இருக்க எடுத்துள்ள முடிவு, அமைச்சரவை நியமனத்தால் அதிருப்தியடைந்துள்ள அரச தரப்பின் சிரேஷ்ட உறுப்பினர்களின் தீர்மானம் உட்பட்ட பல காரணங்களை முன்வைத்து இந்த அரசைக் கலைத்து, மாற்று ஏற்பாடாக இடைக்கால ஆட்சியொன்றை ஏற்படுத்த இரகசியப் பேச்சுக்கள் இடம்பெற்றுவருகின்றன.

இந்த இடைக்கால அரசில் அனைத்துக்கட்சிகளின் தலைவர்களுக்கும் முக்கிய பொறுப்புகளை வழங்கவும், அதில் பிரதமர் பொறுப்பில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்கவும் ஆராயப்பட்டுள்ளது.

ஏற்கனவே அரசுக்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்.பிக்கள் நால்வர் அரசுக்கு வழங்கிய ஆதரவை வாபஸ் பெற்றுள்ளமையால் அரசின் நாடாளுமன்ற பெரும்பான்மை பலம் ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

அரசிலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் முன்னாள் அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில அணியே இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இரகசியக் காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது.

---

## மைத்திரி - அமெ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்றுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் மற்றும் சமூக பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பு தொடர்பில் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமெரிக்க தூதுவரை சந்தித்தமையையிட்டு மகிழ்ச்சியடைந்தேன் எனவும், இலங்கை மக்களின் அவல நிலையைக் கருத்தில் கொள்ளுமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் வேண்டுகோள் விடுத்தமைக்கு தூதுவருக்குத் தாம் நன்றியைத் தெரிவித்தார் எனவும் இலங்கையில் அவரது பதவிக்காலம் வெற்றியடைவதற்குத் தாம் வாழ்த்தினார் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவரும் இந்தச் சந்திப்புக் குறித்துத் தமது டுவிட்டரில் செய்தி வெளியிட்டுள்ளார்.

தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி குறித்த அவரது முன்னோக்கைக் கேட்பதற்கும், அமைதியான போராட்டத்திற்கான உரிமை உட்பட ஜனநாயகக் கோட்பாடுகளை நிலைநிறுத்துதல் மற்றும் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து விவாதிப்பதற்காகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நான் சந்தித்தேன் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## 40 கோடி டொலர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைக்கு கடனுதவி மூலம் இலங்கையின் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்து வருவதும் அரிசியை கூட வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கவை.

இதேவேளை இலங்கை திருப்பிச் செலுத்த வேண்டிய பங்களாதேஷ் நாட்டுக்குரிய கடன்தொகையை அந்நாடு நீடித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அறிவித்துள்ளமையும் சுட்டிக் காட்டத்தக்கது.

---

## மு.காவில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாருஸலாமில் கூடிய கட்சியின் உயர்பீட கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் அரசின் சில சட்ட மூலங்கள் மற்றும் வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வந்த இந்த மூவரும் அண்மையில் அரசுக்கான தமது ஆதரவை விலக்கிக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் கட்சி முடிவுக்கு மாறாக தற்போதைய அரசில் நஸீர் அஹமட் அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

## அதிபர்கள், ஆசிரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிறுத்தம்செய்வதற்குத்திட்டமிட்டுள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் தொடர் போராட்டங்கள் காரணமாக மாணவர்களும் ஊழியர்களும் பாடசாலைக்கு செல்வதற்குப் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது வீடுகளுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்கள் பணி புரிவதற்கும் மாணவர்கள் கல்வி கற்பதற்கும் அனுமதிக்க வேண்டும் என்ற தங்களின் முன்மொழிவு அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டது என்று அதிபர்களின் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு நியாயமான தீர்வை அரசாங்கம் வழங்க வேண்டும் என்று கோரி எதிர்வரும் திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் தொழிற்சங்க செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

## அவசிய மருந்துகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிதியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது என நிதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் இருந்து நேற்றைய தினம் சூம் செயலி ஊடாக நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரச தரப்பு பேச்சுக்களை நடத்தி வரும் நிலையில் அந்தக் குழுவில் பங்கெடுத்துள்ள நிதியமைச்சர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பிலும் விளக்கமளித்துள்ளார்.

---

## மிருசுவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரக வாகனத்தை ரயில் மோதி இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்த அதேநேரம் அச்சிறுவனின் தந்தை , சகோதரம் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்தில் மூவர் உயிரிழந்தனர் என முதலில் வெளியான செய்தி தவறு எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த விபத்தின்போது த.சொலக்சன் வயது 11 என்னும் சிறுவனே சம்பவ இடத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பிள்ளைகள் இருவரையும் வாகனத்தில் தந்தை ஏற்றி வந்த சமயமே பாதுகாப்பற்ற ரயில் கடவையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது வாகனத்தைச் செலுத்திய தந்தையும் மற்றுமோர் சகோதரமும் படுகாயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலைமையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மிருசுவில் பகுதியில் உள்ள வைத்தியசாலை முன்பாக இருக்கும் இந்த ரயில்வே கடவையைக் கடக்க முற்பட்ட போது இதுபோன்ற 4 பாரிய விபத்துகள் இதுவரை இடம்பெற்றுள்ளமையால் இந்த கடவையில் பாதுகாப்புக்காக நிரந்தரக் காவலாளியை நியமிக்குமாறு நீண்ட காலமாக அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

---

## ஊடக அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியாகின.

"நிலையான அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்காக இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் செயற்பாடுகளுக்கு இடமளிக்கும் வகையில் எனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் ஒப்படைத்தேன். எனினும், அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை" – என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நம்பிக்கையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அளித்தார்.

அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவோம் என்று எதிர்க்கட்சிகள் கூறியிருந்தன. இன்று வெள்ளிக்கிழமை. சொன்னதுபோல் ஏன் அதனை முன்வைக்கவில்லை என சபை முதல்வர் நேற்று வினவியபோது அதற்குப் பதிலளித்தார் ரணில் விக்கிரமசிங்க.

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடலில் ஈடுபடுவதற்காக வொஷிங்டனுக்குச் சென்றுள்ள நிதியமைச்சரின் உரைக்கு முன்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவது அபத்தமானது. எனவே நம்பிக்கையில்லாப் பிரேரணையை தாமதப்படுத்துமாறு நான் கேட்டுக் கொண்டேன். நிதி அமைச்சரின் உரைக்கு முன்பாக பிரேரணையைக் கொண்டு வருவதால் எந்தப் பயனும் இல்லை. அவருடைய பேச்சுக்குப் பிறகு என்ன செய்யவேண்டும் என்று நாம் ஒன்றுகூடி விவாதிக்கலாம் – என்றார்.

---

## பிரதமர் மஹிந்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இச்சமயத்தில் இந்தத் திடீர் உரையாடல் கொழும்பு அரசியலில் துருவ மயப்பட்ட நிலைகளில் ஒரு பக்கத்தின் அணி சேரும் போக்கை சுட்டுவதாக இருக்கின்றது என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் அதிக ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு இலங்கைக்கு சீனா ஆதரவளிக்கும் என சீனாவின் பிரதமர் இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனான தொலைபேசி உரையாடலின் போது உறுதியளித்துள்ளார் எனக் கூறப்பட்டது.

"நீங்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் மற்றும் சவால்களை சீனா உணர்கிறது. மேலும் உங்கள் நாட்டில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு எங்களால் முடிந்த உதவியை செய்ய விரும்புகிறோம்" – என்றும் சீனாவின் பிரதமர் மேற்படி தொலைபேசி உரையாடலில் தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள சில அவசர நிதிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசாங்கத்துடன் சீனா இணைந்து செயற்படும் என்றும் சீனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு உறுதியளித்துள்ளார்.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான விரைவான கண்காணிப்பு பேச்சுவார்த்தைகள், சீனாவுடனான இலங்கையின் வர்த்தக பற்றாக்குறையை குறைத்தல் மற்றும் சூழ்நிலை அனுமதிக்கும் போது அதிகமான சீன சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் போன்றவை தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

எங்கள் இரு நாடுகளுக்கும் இடையே நட்பு மற்றும் உறவை மேம்படுத்துவதற்கும் நாங்கள் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவோம், மேலும் இந்த நேரத்தில் நீங்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை நாங்கள் உணர்கிறோம், சிரமங்களை நிவர்த்தி செய்வதற்கும் நாங்கள் ஒன்றாக வேலை செய்வோம் என்றும் சீனப் பிரதமர் கூறியுள்ளார்.

அண்மையில் அறிவிக்கப்பட்ட மனிதாபிமான உதவி, தொடர்ச்சியான ஆதரவு மற்றும் ஒத்துழைப்புக்காக சீன அரசாங்கத்திற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இதன் போது நன்றி தெரிவித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

---

## விலையை லிட்ரோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முதலில் அறிவித்தது.

ஆனால் அந்த விலை உயர்வுக்கு அரசு அங்கீகாரம் வழங்கவில்லை. இதனால் இந்த விலை அதிகரிப்பு நடைமுறைக்கு வராது என நேற்று பிற்பகலே அறிவிக்கப்பட்டது. 12.5 கிலோ கிராம் நிறையைக் கொண்ட சிலிண்டரின் விலை முன்னைய விலைப்படி – 2,675 ரூபாவாக இருக்கும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

# 13 ஆம் திருத்தச் சட்டத்தை விட்டுக்கொடுக்க முடியாது!

## அமைச்சர் டக்ளஸ் திட்டவட்டம்

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதில் ஈ.பி.டி.பி. உறுதியாக இருப்பதாக கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரசாங்க கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கலந்துரையாடல் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில் –

தற்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவது தொடர்பாக பரவலாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக, அமரர் அ. அமிர்தலிங்கமும், மலையக மக்களின் தலைவராக விளங்கிய அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் முஸ்லீம் மக்களின் தலைவராக விளங்கிய மர்ஹீம் எம்.எச்.எம். அஸ்ரப் ஆகியோர் சிறுபான்மைத் தேசிய இனங்களின் நலன்களுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை சிறந்தது என்ற கருத்தை வலியுறுத்தியிருந்தனர்.

ஆனால் தற்போது, சிறுபான்மை தேசிய இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் உட்பட பெரும்பாலான அரசியல் தரப்புக்கள், நிறைவேற்று அதிகார முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து வருகின்றன. தற்போதைய ஜனாதிபதியும் குறித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டு வருகின்றார்.

இந்நிலையில், ஈ. பி.டி.பி. ஆகிய எம்மைப் பொறுத்த வரையில், அரசமைப்பில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்படுத்தப்படினும், தற்போதைய அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்கள் முழுமையாக உள்ளடக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றோம். – என்று தெரிவித்துள்ளார்.



13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் ஆரம்பித்து படிப்படியாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்பதைக் கடந்த 35 வருடங்களுக்கும் மேலாக ஈ.பி.டி.பி. கட்சி வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ‘கோட்டா கோ ஹோம்’ எனக் கூறுவதை உடனடியாக நிறுத்திக் கொள்ளுங்கள்!

## போராட்டக்காரர்களுக்கு கீதா குமாரசிங்க எச்சரிக்கை

‘கோட்டா கோ ஹோம்’ எனக் கூறுவதை உடனடியாக நிறுத்திக்கொள்ளுங்கள் என போராட்டக்காரர்களுக்கு இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

1971 இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுக்கு எதிராக கோஷம் எழுப்பினர். அவர் வீடு செல்லவில்லை எனவும் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அதன்பின்னர் ஜேஆரை எதிர்த்தனர். அவரும் வீடு செல்லவில்லை. எனவே, கோட்டா கோ ஹோம் என்ற பிரசாரத்தை உடன் நிறுத்துங்கள் என அவர் வலியுறுத்தியுள்ளார்.



காலம் வரும்போது ஜனாதிபதி நிச்சயம் செல்வார். அவர் வீடு செல்ல வேண்டுமா என்பதை தேர்தல் தீர்மானிக்கட்டும். காலி முகத்திடலில் உள்ள இளைஞர்களை சிலர், விற்று பிழைக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஏறாவூர் வந்தாறுமூலையில் கசிப்பு உற்பத்தி; பெண் கைது

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலிலுள்ள வந்தாறுமுலை பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தியை மேற்கொண்டுவந்த வீடு ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் ஒருவரை வியாழக்கிழமை நள்ளிரவு கைது செய்துள்ளனர்.

இதன்போது. 10 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு 42 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களை மீட்டு ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து சம்பவதினமான வியாழன் நள்ளிரவு வந்தாறு முலையிலுள்ள குறித்த வீட்டை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகார் தலைமையிலான பொலிஸார் முற்றுகையிட்டனர்.

இதன் போது வீட்டின் சமையல் அறையில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வீட்டின் உரிமையாளரான பெண் ஒருவரைக் கைது செய்தமையுடன் அங்கிருந்து 10 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு, 42 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களை மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் மற்றும் மீட்கப்பட்ட கசிப்பு மற்றும் சான்று பொருள்களுடன் ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளோம் எனவும் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரான்ஸ் மாநகர சபையில் யாழ்.முதல்வர் மணிவண்ணன்



யாழ்.மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பத்மநாதன் மயூரன் மற்றும் யாழ்.மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் ஆகியோர் பிரான்ஸ் நாட்டில் உள்ள அபர்வில்லியர்ஸ் மாநகர சபைக்கு விஜயம் செய்து மாநகர சபையின் பிரதி மேயர் மற்றும் சர்வதேச விவகார பொறுப்பாளர் ஆகியோரைக் கடந்த வியாழக்கிழமை சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின் போது மாநகர சபையின் செயற்பாடுகள், நிர்வாக அலகுகள், அவர்களுடைய அதிகார வரம்புகள் பற்றியும் கலந்துரையாடியதுடன் யாழ் மாநகர சபை மற்றும் அபர்வில்லியர்ஸ் மாநகர சபை ஆகிய இரண்டு சபைகளின் நிர்வாக அனுபவங்களையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டனர்.

# பொலிஸில் இருந்தவரின் கழுத்தில் வெட்டுக்காயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் தடுப்பு காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த – யாழ்ப்பாணம் பொம்மை வெளிப் பகுதியைச் சேர்ந்த – இளைஞன் ஒருவர் கழுத்தில் வெட்டுக் காயத்துடன் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த இளைஞனுக்கு எதிராக யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றினால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

பிடியாணை உத்தரவை நிறைவேற்றும் முகமாக யாழ்ப்பாண பொலிஸாரினால் இளைஞன் கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலையத் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அந்த இளைஞன் தனது உடைமையில் இருந்த பிளேட்டை எடுத்து, தனது கழுத்தைத் தானே அறுத்துக்கொண்டுள்ளார் எனத் தெரிவித்து பொலிஸார யாழ்.போதனா வைத்தியசாலையில் அவரைச் சேர்த்துள்ளனர்.

# காலி முகத்திடல் ஆர்ப்பட்டத்துக்கு ஆதரவாக புத்தளத்தில் ஒன்று திரண்ட மக்கள்





கொழும்பு, ஏப்ரல் 23

கொழும்பு – காலி முகத்திடலில் இடம்பெற்று வருகின்ற அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து புத்தளத்தில் வியாழன் நள்ளிரவு முதல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராகவும் குறித்த அரசாங்கம் பதவி வி லகும் வரை கோத்தா கோ கம என கொழும்பில் அமைக்கப்பட்டுள்ளதைப் போன்று புத்தளத்திலும் கூடாரங்களை அமைத்து மக்கள் தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி ஆர்ப்பாட்டத்தில் மதபேதமின்றி சிங்களம், தமிழர், முஸ்லிம்களென மூவின மக்களும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.04.2022இல் வெளியிடப்பெற்றது.